பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 19 வியாழக்கிழமை (03 - 08 - 2000) VALAMPURI ஒலி: 227

# சிங்களபௌத்த பேரினவாதிகளின் எதிர்ப்பின் மத்தியில் இன்று அரசியல் சீர்திருத்த நகல் யாப்பை; ஜனாதிபதி பா.மன்றில் சமர்ப்பிப்பார்!

## பாராளுமன்ற வளாகத்தில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு அலுவலக நிருபர்)

**சிங்கள பௌத்த பேரினவாதிகளின் பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் உத்தேச அரசியல்யாப்பு இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது**

**இதனைஒட்டி பாராளுமன்ற வளாகம், பலத்த பாதுகாப்புக்குட்படுத்தப் பட்டுள்ளதுடன் பாராளுமன்றத்திற்குச் செல்லும் பாதைகளும் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்தம் சட்டவலுவுள்ளதா என ஆராய்ந்து உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் அறிவிக்கும் என நேற்று தெரிவிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையில் நீதிபதிளான பிரியந்தபெரேரா. லக்ஷ்மன்வீரசேகரா ஆகி

(8 ஆம் பக்கம் பார்க்க)

★ உத்தேச அரசியல் நகலை

## பாராளுமன்றில் சமர்ப்பிப்பதை எதிர்த்து 10 அமைப்புகள் மனுதாக்கல்

[கொழும்பு]

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் இன்று பாராளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்படவுள்ள அரசியல் சீர்திருத்த யோசனையை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சி உட்பட பத்து அமைப்புகள் தனித்தனியாக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்துள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கோறள கட்சியின் தவிசாளர் கரு ஜெயசூரியாவும் சிங்கள உறுமயக் கட்சியின் சார்பில் அதன் செயலாளர் திலக் கருணாரட்னாவும் மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவும் எதிர் மனு தாக்கல் செய்துள்ளனர்.

மற்றும் பொது அமைப்புகளின் சார்பில் பாக்கியசோதி

## கூட்டணியின் அரசியல் பீடம் விரைவில் கூடவுள்ளது!

(கொழும்பு]

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால இன்று

ரிப்பதா இல்லையா என்பது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசி

## ரிக்கெற் வழங்கல் இன்று இடம் பெறமாட்டாது

(யாழ்ப்பாணம்)

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலிற்கான ரிக்கெற் வழங்கல் இன்று இடம்பெறமாட்டாதென யாழ் சிவில் நிர்வாகக் காரியாலயம் நேற்றுத் தெரிவித்தது.

இது தொடர்பாக மேற்படி காரியாலயம் மேலும் தெரிவிக்கையில்:

வடபகுதி பயணிகள் சேவையில் ஈடுபட்டு வந்த 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் திருத்த வேலைகளுக்காக கொழும்பு செல்லவேண்டி இருப்பதால் மேற்படி ரிக்கெற் வழங்கும் பணிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் ரிக்கெற் வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்

[8ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வு யோசனைக்கு ஐ. தே. கட்சியிலிருந்தும் ஆதரவு 'வாக்கு

[கொழும்பு]

உத்தேச அரசியல் அமைப்புத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்போது ஐக்கியதேசியக் கட்சியின் மாற்றுக்குழு உறுப்பினர்களுடன் மேலும் 21 ஐக்கியதேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அரசுடன் சேர்வார்கள் என ஐக்கியதேசியக் கட்சிஎம். பி. றொனிடிமெல்லும் அமைச்சர் கலாநிதி சரத்அமுனுகமவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (வ)

## கப்பலில் இழந்த பொருளுக்கு நட்டஈடு பெற்றுத்தர வேண்டும்

### மாவையிடம் வணிகர்கழகம் கோரிக்கை

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் உணவுப் பொருட்கள் எடுத்துவரப்பட்ட போது அவை கடலில் மூழ்கடிக்கப் பட்டமையால் யாழ். வர்த்த

யிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றஎம். பியுடனான சந்திப்பு ஒன்றிலேயே யாழ்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள அரசியல் சீர்திருத்த மசோதாவை ஆதரிப்பதா இல்லையா என்பது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் பீடம் கூடித் தீர்மானிக்கவுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பௌத்த பீடாதிபதிகளை ஜனாதிபதி சந்தித்தார்

(கொழும்பு)

உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்த சட்டமூலத்திற்கு ஆதரவுவேண்டி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா நேற்று முன்தினம் கண்டிக்கு சென்று பௌத்த மத பீடாதிபதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஜனாதிபதிக்கும் பௌத்த மத பீடாதிபதிகளுக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

வ]

# ஐ. தே. க. - பொதுஜன ஐ. முன்னணி நேற்று இறுதி நேர சந்திப்பு

## முடிவு எட்டப்படவில்லை

(கொழும்பு)

இன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச அரசியல் யாப்பு சீர்திருத்த நகல் தொடர்பான இறுதிச் சந்திப்பு அரசுக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையில் நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்றது.

குறிப்பிட்ட வாக்குமூலத்திற்குவாக்களிப்பது தொடர்

(8 ஆம் பக்கம்பார்க்க)

# யாழில் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

எழுதுவினைஞர் நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு யாழ். மாவட்ட பரீட்சார்த்திகள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி

(8ஆம் பக்கம் பார்க்க)

... மனு தாக்கல் செய்துள்ளனர்.

மற்றும் பொது அமைப்புகளின் சார்பில் பாக்கியசோதி

(8ஆம்பக்கம் பார்க்க)

# பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

1999 ஆம் ஆண்டு ஆவணி மாதம் வவுனியா உக்குளாங்குளத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட இரு ரெலோ உறுப்பினர்கள் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சுப்பிரமணியம் தேவானந்தன், சம்பத் வீரசேகர ஆகியோரே பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# நாடுதிரும்பினார்

(கொழும்பு)

இருவாரகால விஜயம் ஒன்றை மேற்கொண்டு சீனா சென்ற பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு நேற்று நாடு திரும்பினார்.

இவர் நாடு திரும்பியதும் இன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச அரசியல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக கொழும்பில் பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

[கவ]

மூலம் உணவுப் பொருட்கள் எடுத்துவரப்பட்ட போது அவை கடலில் மூழ்கடிக்கப்பட்டமையால் யாழ். வர்த்தகர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கு நட்ட ஈடு பெற்றுத்தர நடவடிக்கை எடுத்து உதவுமாறு யாழ். வணிகர் கழகம் மாவை சேனாதிராசா எம்பி

தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றஎம் பியுடனான சந்திப்பு ஒன்றிலேயே யாழ். வணிகர் கழகம் இக்கோரிக்கையை விடுத்துள்ளது.

மூன்றுகப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டமைக்குநட்டஈடுபெற்

[8ஆம் பக்கம் பார்க்க]

# சஞ்சீவனைச் சுட்ட படையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## காமினி ஜெயசுந்தரா உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

படையினரால்சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். இந்துக்கல்லூரிமாணவன்சோமசுந்தரம் சஞ்சீவனின் மரணத்துடன் தொடர்புடைய படையினர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தாம் தயாராக உள்ளதாக 51 ஆவது படையணித் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தரா நேற்றுத் தெரிவித்தார்.

சஞ்சீவனின் மரணம்தொடர்பாக படைத்தரப்பில் எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து விளக்கும் முகமாக நேற்று நடந்த சந்திப்பொன்றிலேயே அவர்இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, வணபிதா பேணாட் அடிகளார், வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவர் க.இராசதுரை, யாழ். இந்துக்கல்லூரி அதிபர் சிறிகுமரன், யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் அருணகிரிராஜா, யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி என். வித்தியாதரன், சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவின் தலைவர் எஸ். பரமநாதன், மற்றும் பல்கலைக்கழக மாணவப் பிரதிநிதிகள் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த காமினி ஜெயசுந்தரா கிருஷாந்தி குமாரசாமியின் விடயத்தில் எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டதோ அதே போன்று சஞ்சீவனின் கொலைக்கும் நடவடிக்கை எடுக்கப்படுமெனக் கூறினார்.

யாழ். பொலிஸ் அத்தியட்சகர் கருத்து கூறுகையில்

(8ஆம் பக்கம்பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

**சிமெந்து கூரை ஓடுகள்**

லண்டன் Parry நிறுவனத்தால் தரநிர்ணயம் செய்யப்பட்ட சிமெந்து கூரை ஓடுகள், முகட்டோடுகள் விற்பனைக்குண்டு. அத்துடன்பல அளவுப் பிரமாணங்களில் இயந்திரங்களால் தயாரிக்கப்படும் கொங்கிறீட் கற்களும் விற்பனைக்குண்டு.

தொழிற்சாலையில் நேரடியாக பொருட்களை கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவுகளும் இலவச போக்கு வரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை.
பரராசசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில். (1611)

## உற்பத்திப் பொருட்கள் தேக்கம்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இருந்து இடப்பெயர்ந்துள்ள பனை சார் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருக்கும் இளம் பெண்கள் தமது உற்பத்திப் பொருட்களை இலகுவில் சந்தைப்படுத்த முடியாமல் திண்டாடி வருவதாகத் தெரியவருகின்றது;

இவர்களால் உற்பத்தி செய்யப்படும் பனை ஓலைத் தொப்பி.அழகிய பெட்டி வகைகள் மற்றும் கூடைவகைகளை விற்பனை செய்வதற்கு யாழ்ப்பாண நகரத்தில் கடை கடையாக ஏறித்திரிந்தும் அவற்றினை இலாபகரமாக விற்பனை செய்ய முடியாமல் இருப்பது பற்றி அவ்உற்பத்தியாளர்கள் பெரும் கவலை தெரிவித்துள்ளனர்.

(செ-77)

# நடத்துநர் பதவிக்கு தெரிவானோர்

# நாளை 4 ஆம் திகதி சமுகம் தரவும்

## ஈ. பி. டி. பி, அமைப்பினர் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

நடத்துநர் பதவிக்கு விண்ணப்பித்த கீழ்க் குறிப்பிடப்படுவோர் பின்வரும் ஆவணங்களுடன் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி யாழ். பிராந்திய காரியாலயத்தில் பின்வரும் ஆவணங்களுடன் சமுகம் தருமாறு கேட்கப்படுகின்றனர்.

I பிறப்புச் சான்றிதழ் (பிரதி), கல்விச்சான்றிதழ் (பிரதி). வேறு தகைமைகள் இருப்பின் (பிரதி), நிரந்தர வசிப்பிடத்தை கிராமசேவையாளர் மூலம் உறுதிப்படுத்தி சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் மேல் ஒப்பமிடல் வேண்டும்;

பெயர் விபரங்கள் வருமாறு;

மயில்வாகனம் புவனதாஸ் சாவகச்சேரி, செல்வராசா ராஜேஸ்வரன் சாவகச்சேரி, செல்லக்கண்டு யசோதரன் கொடிகாமம், சிவராசா உதயசேகரன் வேம்பிராய், செல்வராசா தர்மசிறி, சாவகச்சேரி, செல்வரட்ணம் திருவிந்தன் கொடிகாமம், கார்த்திகேசு பிரபு மீசாலை, சண்முகராசா சிறீக்குமரன் சாவகச்சேரி, பரமலிங்கம் கஜேந்திரன் சாவகச்சேரி, மார்க்கண்டு சிறீமோகன் கொடிகாமம்,

சின்னையா இராமச்சந்திரன் புலோலி வடமேற்கு. சிவஞானரத்தினம் ஜெகவினோதன் கரவெட்டி, சுப்பிரமணியம் சுதேஸ்வரன் செம்பியன் பற்று தெற்கு, வீரசிங்கம் ஞானரூபன் கரவெட்டி, அருமைத்துரை அனந்தன் புத்தூர், செகராசா கமலேந்திரன் நீர்வேலி, சின்னராசா முரளிதரன் அச்சுவேலி ஆனந்தராசா குகானந்தன் கோப்பாய், மாணிக்கன் குமார் கிருஸ்ணன் புத்தூர், சின்னத்தம்பி முகுந்தன் புத்தூர், கனகரத்தினம் ஜீவானந்தன் புத்தூர், கணேசன் கருணாகரன் அச்சுவேலி, சின்னராசா கோகுலதாசன் புத்தூர். நடராசா மோகனமூர்த்தி அச்சுவேலி, செல்லத்துரை நித்தியானந்தம் நீர்வேலி, மயிலு சிவராசதுரை அச்சுவேலி. சிவராசா சிவரூபன் அச்சுவேலி, பூதத்தம்பி கம் அகிலநாயகம் யாழ்ப்பாணம், யேசுதாசன் கொன்சலஸ் யாழ்ப்பாணம், இராசநாயகம் அமலநாயகம் யாழ்ப்பாணம், ஆறுமுகம் யோகலிங்கம் யாழ்ப்பாணம், சுப்பிரமணியம் நந்தக்குமார் சுன்னாகம், நவரட்ணராசா கிருஸ்ணரூபன் சண்டிலிப்பாய், மகாலிங்கம் தேவக்குமார் வரணி, அரியதுரை அரவிந்தன் சுன்னாகம், மதியாபரணம் பிரதீபன் கொழும்புத்துறை, முத்தையா சிறீஸ்சுந்தராஜா யாழ்ப்பாணம், சிவலிங்கம்விஜயசேகர்யாழ்ப்பாணம் நாகராசா சுரேஸ்கண்ணா அளவெட்டி,

குலசேகரம் அருள்ராஜா கொக்குவில் ஜேக்கப் யோன் கியூபேட யாழ்ப்பாணம், தருமலிங்கம் அன்பழகன் யாழ்ப்பாணம், அல்பிரட் டண்சன் யாழ்ப்பாணம், அருளானந்தம் அருள்பிரகாஸ் யாழ்ப்பாணம், முத்துக்குமாரு ஐங்கரன் உரும்பிராய் தெற்கு, தியாகராஜா சுபாஸ்குமார் யாழ்ப்பாணம், செல்வநாயகம் பிரதீபன் மானிப்பாய், சின்னையா திவ்வியன் அச்சுவேலி, பாலசுப்பிரமணியம் ஜெயபாஸ்கர் சுழிபுரம்,

சுப்பிரமணியம் சுஜீவன் கரவெட்டி, கமலாகரன் சந்திரகாசன் அல்வாய், சிவராஜா சுபேந்திரன் அல்வாய், கனகரட்ணம் வரதராஜா கரவெட்டி, கிருஸ்ணமூர்த்தி உதயணன் உடுப்பிட்டி, தம்பையா சிறீஸ்கந்தராசா கரவெட்டி, பொன்னன் சிறீகந்தராசா கரவெட்டி, இட்டிணன் சசிக்குமார் கரவெட்டி, சுகுமாரன் சுதாகர் அல்வாய் வதிரி, நடராஜா முருகமூர்த்தி அல்வாய், முத்துத்தம்பி துஸ்யந்தன் கோண்டாவில். சுப்பிரமணியம் சுதர்சன் உடுவில் வடக்கு. நாகராசா நகுலேஸ்வரன் சுன்னாகம், சி. என். நந்தகுமார் சுன்னாகம்,

கார்த்திகேசு நவநீதராசா ஏழாலை, சின்னத்தம்பி சண்முகநாதன் சுன்னாகம், கந்தசாமி ஜெயச்சந்திரன் தெல்லிப்பழை, கதிரேசன் குணரத்தினம் தெல்லிப்பழை, சிவசுப்பிரமணியம் மணிவண்ணன் மல்லாகம், பாலசுப்பிரமணியம் சிறீதரன் சலோசியர் முகாம், இலக்கணகுமாரன் நிஷாந்தன் ... ரூபன் பருத்தித்துறை, திருஞானலிங்கம் புருசோத்குமார் கொக்குவில், தம்பு சபாரத்தினம் சாவகச்சேரி, தருமலிங்கம் கமலநாதன் உரும்பிராய் மேற்கு, கந்தையா கிருஷ்ணகுமார் கோண்டாவில் கிழக்கு, சுப்பிரமணியம் விவேகானந்தராசா கோண்டாவில், நவரத்தினம் பரமரத்தினம் கோண்டாவில், சின்னக்கோன் சிவமோகன் மிருசுவில், கோபாலசிங்கம் மோகனகுமார் நெடுந்தீவு, ம. ஜெயசீலன் நெடுந்தீவு, இராசரத்தினம் வசீகரன் மானிப்பாய், கந்தையா ஆனந்தவேல் மானிப்பாய், தனபாலசிங்கம் ரஞ்சன் பண்டத்தரிப்பு. திருவானந்தராம் புனிதராஜ் மானிப்பாய், தெய்வேந்திரம புதியராஜா மானிப்பாய், மைக்கல் யூட் வில்லவரசிங்கம் மானிப்பாய், காராளப்பிள்ளை தயாபரன் ஆனைக்கோட்டை, பாலசுப்பிரமணியம் குகதாசன் சண்டிலிப்பாய், தங்கராசா சுரேன் பண்டத்தரிப்பு. க. புவனேந்திரராஜா சண்டிலிப்பாய், சிவசுந்தரம் சத்தியசிவம் பண்டத்தரிப்பு, தம்பிராஜா பார்த்தீபன் பண்டத்தரிப்பு, சின்னத்தம்பி நித்தியானந்தன் இளவாலை,

கந்தசாமி ஜெயக்குமார் வட்டுக்கோட்டை, ஞானசுந்தரம் பாலராசன் சங்கானை, சிவப்பிரகாசம் தயாபரன் தொல்புரம், பாலசுப்பிரமணியம் உதயேந்திரன் சித்தன்கேணி, சிவஞானம் சிவபாலன் பண்ணாகம், முருகேசு ரகுநாதன் சுழிபுரம். கிருஸ்ணசாமி கணநாதன் சுழிபுரம், சுந்தரம்பிள்ளை ஜெயரத்தினம் சுழிபுரம் கிழக்கு, அம்பலவாணப்பிள்ளை வசந்தன் வட்டுக்கோட்டை, நடராசா குணராசா வட்டுக்கோட்டை, சிங்காரவேல் சங்கர் ஊர்காவற்றுறை. கோபாலபிள்ளை ரமேஸ்தாசன் வேலணை கிழக்கு' சுவாணிப்பிள்ளை ஜேயல் திரோய் நெடுந்தீவு. பத்மநாதன் மணிமாறன் அல்லைப்பிட்டி, இரத்தினகேசரலிங்கம் தயாளமித்திரன் வேலணை. தர்மலிங்கம் பரம்சோதி காரைநகர், அமிர்தநாதன் இருபானந்தன் அனலைதீவு, வைத்தியலிங்

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடா நாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகிறது.

**சங்கானை**

| | |
|---|---|
| 150435 ஏ | 150435 பி |
| 150435 சி | 150435 டி |
| 150435 ஈ | 152554 ஏ |
| 152554 பி | 153225 ஏ |
| 153225 பி | 153225 சி |
| 153335 ஏ | 153335 பி |
| 153336 ஏ | 153362 ஏ |
| 153457 ஏ | 153501 ஏ |

**சாவகச்சேரி**

| | |
|---|---|
| 145679 ஏ | 148258 ஏ |
| 148258 பி | 148258 சி |
| 148258 டி | 148258 ஈ |
| 148258 எவ் | |

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| 140872 ஏ | 140872 பி |
| 140872 சி | 144353 ஏ |
| 144353 பி | 144353 சி |
| 144353 டி | 144704 ஏ |
| 144704 பி | 149871 ஏ |
| 149888 ஏ | 149928 ஏ |
| 149928 பி | 149928 சி |
| 149928 டி | 149928 ஈ |
| 150001 ஏ | 150273 ஏ |
| 150285 ஏ | 150285 பி |
| 152350 ஏ | 152792 ஏ |
| 152861 ஏ | 152867 ஏ |
| 152985 ஏ | |

**கரவெட்டி**

| |
|---|
| 144919 ஏ |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 144902 ஏ | 144902 பி |
| 144902 சி | 144961 ஏ |

| | |
|---|---|
| 145173 ஏ | 145173 பி |
| 145173 சி | 145173 டி |
| 145306 ஏ | 145340 ஏ |
| 145408 ஏ | 145408 பி |
| 145408 சி | 145408 டி |
| 145408 ஈ | 145408 எவ் |
| 145466 ஏ | 145493 ஏ |
| 145493 ஏ | 145540 ஏ |
| 145570 ஏ | 145581 ஏ |
| 145583 ஏ | 153194 ஏ |
| 153194 பி | 143103 ஏ |
| 144411 ஏ | 144616 ஏ |
| 144616 பி | |
| 147765 ஏ | 147765 பி |
| 149815 ஏ | 149824 ஏ |
| 149834 ஏ | 149873 ஏ |
| 149906 ஏ | 149915 ஏ |
| 149915 பி | 149915 சி |
| 149921 ஏ | 149921 பி |
| 149981 ஏ | 149981 பி |
| 149981 சி | 149981 டி |
| 150013 ஏ | 150013 பி |
| 150025 ஏ | 150025 பி |
| 150029 ஏ | 150029 பி |
| 150029 சி | 150047 ஏ |
| 150047 பி | 150059 ஏ |
| 150059 பி | 150073 ஏ |
| 150073 பி | 150089 ஏ |
| 150089 பி | 150089 சி |
| 150105 ஏ | 150105 பி |
| 150105 சி | 150115 ஏ |
| 150115 பி | 150119 ஏ |
| 150119 பி | 150119 சி |
| 150139 ஏ | 150139 பி |
| 150176 ஏ | 150176 பி |
| 150176 சி | 150189 ஏ |
| 150219 ஏ | 150219 பி |
| 150219 சி | 150219 டி |
| 150219 ஈ | 150219எவ் |
| 150225 ஏ | 150251 ஏ |
| 150251 பி | 150252 ஏ |
| 150252 பி | 150254 ஏ |
| 150255 ஏ | 152311 ஏ |

## கோப்பாய்

| | |
|---|---|
| 144902 ஏ | 144902 பி |
| 144902 இ | 144961 ஏ |
| 144961 பி | 145419 ஏ |
| 145460 ஏ | 145495 ஏ |
| 145496 ஏ | 145497 ஏ |
| 148960 ஏ | 148960 பி |
| 148971 ஏ | 150827 ஏ |
| 153197 ஏ | 148223 ஏ |
| 148223 பி | 148223 சி |
| 148223 டி | 149812 ஏ |
| 152930 ஏ | |

## நல்லூர்

| | |
|---|---|
| 136817 ஏ | 136817 பி |
| 136817 சி | 136817 டி |
| 136817 ஈ | 141032 ஏ |
| 141058 ஏ | 141063 ஏ |
| 141100 ஏ | 141167 ஏ |
| 141167 பி | 144809 ஏ |
| 144809 பீ | 144809 சி |
| 144810 ஏ | 144810 பி |
| 144812 ஏ | 144818 ஏ |
| 144820 ஏ | 144820 பி |
| 144821 ஏ | 144821 பி |
| 144821 சி | 144822 ஏ |
| 144822 பி | 144823 ஏ |
| 144824 ஏ | 144824 பி |
| 144824 சி | 144824 டி |
| 144828 ஏ | 144828 பி |
| 144829 ஏ | 144829 பி |
| 144829 சி | 144831 ஏ |
| 144831 பி | 144833 ஏ |
| 144833 பி | 144833 சி |
| 144833 டி | 144836 ஏ |
| 144836 பி | 144836 சி |
| 144836 டி | 144836 ஈ |
| 144836 எவ் | 144836 ஜி |
| 144837 ஏ | 144837 பி |
| 144838 ஏ | 144838 பி |
| 144891 ஏ | 145050 ஏ |

| | |
|---|---|
| 150251 பி | 150252 ஏ |
| 150252 பி | 150254 ஏ |
| 150255 ஏ | 152311 ஏ |
| 152311 பி | 152324 ஏ |
| 152383 ஏ | 152383 பி |
| 152392 ஏ | 152392 பி |
| 152392 சி | 152392 டி |
| 152458 ஏ | 152458 பி |
| 152577 ஏ | 152577 பி |
| 152577 சி | 152627 ஏ |
| 152627 பி | 152627 சி |
| 152744 ஏ | 152766 ஏ |
| 152766 பி | 152790 ஏ |
| 152790 பி | 152929 ஏ |
| 152929 பி | 152929 சி |
| 152929 டி | 153011 ஏ |
| 153011 பி | 153011 சி |
| 153012 ஏ | 153012 பி |
| 153012 சி | 129029 ஏ |
| 129029 பி | 150468 ஏ |
| 150468 பி | 150468 சி |
| 150468 டி | 150468 ஈ |

## சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 143794 ஏ | 146303 ஏ |
| 146303 பி | 147096 ஏ |
| 147096 பி | 148255 ஏ |
| 148255 பி | 148255 சி |
| 150373 ஏ | 150373 பி |
| 150373 சி | 150373 டி |
| 150517 ஏ | 150517 பி |
| 153238 ஏ | [illegible] ஏ |
| 153244 பி | 153245 ஏ |
| 153245 பி | 153265 ஏ |
| 153342 ஏ | 153342 பி |
| 153342 சி | |

## தெல்லிப்பழை

| | |
|---|---|
| 150635 ஏ | 150635 பி |
| 150668 ஏ | 151763 ஏ |
| 153297 ஏ | |

மயிலு சிவராசதுரை அச்சுவேலி, சிவராசா சிவரூபன் அச்சுவேலி, பூதத்தம்பி கோகுலன் புத்தூர், மகேசன் புலேந்திரன் புத்தூர், சிவரத்தினம் சிவபாலசிங்கம் யாழ்ப்பாணம், சந்திரசேகரம் நிரேஸ் கல்வியங்காடு, சந்திரசேகரம் சதீஸ் கல்வியங்காடு, ஜெயராசசேகரம் சிறீதரன் அளவெட்டி, யேசுதாசன் ஜெயக்குமார் நவாந்துறை.

மரியாம்பிள்ளை மரியதாஸ் யாழ்ப்பாணம், இராசநாய

## உடுவில்

| | |
|---|---|
| 144931 ஏ | 145234 ஏ |
| 145234 பி | 145423 ஏ |
| 145423 பி | 145423 சி |
| 145488 ஏ | 145488 பி |
| 145488 சி | 145488 டி |
| 145488 ஈ | 145498 ஏ |
| 145681 ஏ | 138146 ஏ |
| 138559 ஏ | 138559 பி |
| 138559 சி | 146272 ஏ |
| 146411 ஏ | 146411 பி |
| 146411 சி | 146411 டி |
| 146411 ஈ | 150322 ஏ |
| 150322 பி | 150332 ஏ |
| 150382 ஏ | 150382 பி |
| 150382 சி | 150382 டி |
| 150382 ஈ | 150431 ஏ |
| 150431 பி | 150476 ஏ |
| 151846 ஏ | 151846 பி |
| 151846 சி | 151846 டி |
| 153385 ஏ | 153385 பி |
| 153385 சி | 153412 ஏ |
| 153412 பி | 153412 சி |
| 153500 ஏ | |

(நா-சு)

சுப்பிரமணியம் சிறீதரன் சலோசியர் முகாம், இலக்கணகுமாரன் நிஷாந்தன் இளவாலை, வேலுப்பிள்ளை வலிபவதாஸ் அளவெட்டி, கனகசுந்தரம் பிறேமதாஸ் (லவ் லேன், உடுவில்), தர்மலிங்கம் பாலகிருஷ்ணன் [கோப்பாய் தெற்கு கோப்பாய்), சோமசுந்தரம் பிரதீபன் மல்லாகம், சண்முகநாதன் கமலநாதன் இளவாலை, சின்னமணி தர்மராசா (இராசவீதி, கோப்பாய்மத்தி), கிருஷ்ணமூர்த்தி சிவரூபன் புலோலி தெற்கு, கனகரத்தினம் சிறீகாந்த

# தபால்கள் இன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடா நாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 108 தபால் பொதிகள் நேற்று பருத்தித்துறை வந்த செஞ்சிலுவைக் கப்பலில்எடுத்துவரப்பட்டுள்ளது.

இதேவேளை வெளியூர்களுக்கான தபால்கள் அடங்கிய63 தபால் பொதிகள் இங்கிருந்து அனுப்பப்பட்டுள்ளதாக யாழ் தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தபால்கள் இன்றே தரம் பிரித்து விநியோகிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-8)

பரம்சோதி காரைநகர், அமிர்தநாதன் இருபானந்தன் அனலைதீவு, வைத்தியலிங்கம் ரவீந்திரகுமார் நெடுந்தீவு. பராரஜசிங்கம் ஜெயபாஸ்கர் அனலைதீவு, கந்தையா குணசீலன் நெடுந்தீவு, மரியதாஸ் சகாய ஜெயசீலன் நெடுந்தீவு, மரியமுத்து கோணேஸ்வரன் நெடுந்தீவு, செல்லப்பா சிவனேசன் புத்தூர்,

## சனி பகவானின்...

யத்தில் வெற்றியையும் உ[illegible]டாக்கும் 02-08-2000 இல் ராகுகேது மாற்று நன்மையாகும்.

புகழ், பெருமை, செல்வம், செல்வாக்கு எல்லாவற்றிலும் ஏற்றம் காணப்படும். நண்பர்கள் சாதகமாகவும் இருப்பார்கள். ஆரோக்கியம் மிகவும் நன்றாகும். பொருளாதார ரீதி மேலோங்கும் குடும்பத்தில் அத்தியாவசியமான தேவைகள் பூர்த்தி செய்யப்படும். தடைப்பட்ட சுபகாரியம் தற்போது கோலாகலமாக நடைபெறும். மணமானவர்களுக்கு மக்கட்பேறும் உண்டாகும். கணவன் மனைவி உறவு அற்புதம். கொடுத்த பணத்தை வட்டியுடன் பெறுவீர்கள் நண்பர்களால் நல்ல பலனும் ஆதாயமும் உண்டாகியபடி இருக்கும். (நாளை தொடரும்)

# சனி பகவானின் இடப்பெயர்வு

# அமைதிவாழ்வை சீர்குலைக்குமா?

யாழ்.வாக்கிய பஞ்சாங்கப் படி சனிபகவான் 3 8 2000ல் மேடராசியிலிருந்து இடபத்திற்கு மாற்றம் அடைகிறார். 20 05 2003 வரை இடப ராசியில் சஞ்சரிக்கும் போது இடையே14 10 2000 முதல் 11.4.2001 வரை மேட ராசியில் சனிபகவான் வக்கிரமும், சஞ்சாரமும் செய்வார். 2.08.2000முதல்ராகு,கேதுக்கள் முறையே மிதுனம்,தனுசு ராசிகளுக்குமாற்றம்அடைந்து 1 1/2 வருடங்கள் வரை அவ்விராசிகளில் சஞ்சாரம் செய்யும். சனி, குருவின் தீய சேர்க்கைக் காலம் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்காது.

## மேடம்

[அச்சுவினி, பரணி, கார்த்திகை]

சனி,03.08 2000 இல் இடபத்திற்கு மாற்றமடைகிறது. 14 - 10 - 2000 முதல் 14.04.2001 வரை மீண்டும் மேடத்தில் வக்கிர சஞ்சாரம் செய்யும். வியாழன் ஒரு வருடம் வரை தனஸ்தானமாகிய 2 ஆம் இடபராசியில் சஞ்சரிக்கும் போது தனலாபம், பொருள் விருத்தி. குடும்ப சுகம் உண்டாகும். கடந்த காலத்தில் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் அகலும், மன அமைதியுண்டாகி, நிம்மதிநிலவும் இலாபாதிபதியாகிய சனியும் இணைவதால் பொருளாதாரம் சிறப்பாக அமையும்.பழைய கடன்கள் தீர்க்கப்படும். புதிய தொழிலை ஆரம்பிக்கவும்,அதில் முதலீடு செய்யவும் சூழ்நிலை உருவாகும். தேகாரோக்கியம் நன்றாக இருக்கும்.குடும்ப ஸ்தானத்தில் சனீஸ்வரன் சேர்க்கையால் கணவன் மனைவிக்கிடையே அபிப்பிராய பேதங்கள் அடிக்கடி தோன்றும் குரு சம்பந்தத்தால் உடனுக்குடன் சமரசம் ஏற்படும் இளைய சகோதர ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் சகோதர விரோதம் காணப்படும். பணப்புழக்கம் பிரமாதமாக இருக்கும்.

## இடபம்

(கார்த்திகை 2, 3, 4, ரோகினி, மிருகசிரடம்1, 2)

சனிப்பெயர்ச்சி 3.08.2000 முதல் 20.5 2003வரைஜென்மராசியாகிய இடபத்தில் குரு 02.6 2000 முதலும் சனி 3.8 2000 முதலும முறையே ஒரு வருடம், 2 1/2 வருடங்கள் வரை சஞ்சாரஞ் செய்யும்.ஜென்ம வியாழன,71/2ச் சனி நடுக்கூறு தீயசேர்க்கை காலத்தில் ஆரோக்கியப்பாதிப்பு,பொருளாதார நிலையில் அதிருபதியான போக்கு, எதிர் பாராதசெலவுகள்வீண் விரயங்கள்போன்ற அனுகூல மற்ற பலன்கள். ஒரு வருடம் வரை ஏற்படும். சகோதரர்களால உதவி,ஒத்தாசை கிட்டாது. தனம், பொருள், மனை, வாகன, விருத்தியின்மை உண்டாகும். இருக்கும் இல்லத்தில் குறைகள் இருந்து வரும் கணவன் மனைவி உறவில் திருப்தியேற்படாது. கொடுக்கல் வாங்கல்களில் சாதக நிலைகிட்டாது.

## மிதுனம்

(மிருகசிரிடம்3, 4திருவாதி புனர்பூசம 1, 2, 3)

உங்களுக்கு3 8 2000முதல் 20 5 2003 வரை 7 1/2சனி முற் கூறு நடைபெறும். குருபகவான் 12 ஆம் விரயஸ்தான வீட்டிற்கு வருகிறார். 3.8 2000 முதல் உங்களுக்கு ஏழரை நாட்டுச் சனியும் தொடங்குகின்றது. கடுமையான கஷ்டங்களும், சோதனைகளும் உண்டாக வாய்ப்பேற்படும் சனியுடன் 12 இல் சஞ்சரிக்கும் குரு தன் 5 ஆம் பார்வையால் 4 ஆம்வீட்டையும்,7 ஆம் பார்வையால் 6 ம் வீட்டையும்,9 ஆம் பார்வையால் 8 ஆம் வீடடையும் ஒரு வருடம் நோக்குவார்.

உங்கள்ஆரோக்கியம்பாதிக்கப்படும், எதிர் பாராத விபத்துக்கள் உண்டாகும். மனைவி உடல் நிலை பாதிக்கும். குடும்பத்தில் மருத்துவச் செலவு அதிகரிக்கும். உங்களுக்குஅடிக்கடி நீண்டபயணமும், அலைச்சல்களும்,அதனால் தன விரயமும் ஏற்படும். குடும்பத்தில் கவலைகள் தரக்கூடிய சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும். எடுக்கும் கருமங்கள் வெற்றியைத் தாரது. சிலருக்குவீடு அல்லது தொழில் மாறலாம். பொருளாதார நிலை மந்தமாகும். பெற்ற கடனைத் திரும்பச் செலுத்த முடியாது கணவன் -மனைவி உறவு திருப்திகரமாக இருக்காது சிலருக்கு குடும்பத்தில் வீண் சண்டை சச்சரவுகள் ஏற்படும். பூர்வீகச் சொத்து இழப்புக்கிடும். குடும்பத்தில் மங்களகரியங்கள் தடைப்படும். எதிரிகளால் இடையூறு ஏற்படலாம் எதிர்பாராத் செலவு கிட்டும்.

## கடகம்

(புனர்பூசம், பூசம், ஆயிலியம்)

3 8.2000 முதல் மாறும் சனி 20.5.2003 வரை11 இல் சஞ்சரிக்கும்போது 6 மாதம் இடையே மேடத்தில் வக்கிரமடையும். உங்களது ராசிக்கு 11 ஆம் இலாபஸ்தானமாகிய இடபராசியில் குரு பெயர்ச்சி வளமான நிலையைக் குரு தந்து, எண்ணங்கள் நிறைவேற,நினைத்ததைப் பூர்த்தி செய்யும் வாய்ப்பினைக் கடக ராசிக்காரர்கள் பெறுகின்றார்கள்.தனம் பொருள், மனை,வாகன குடும்ப விருத்திகள் அதிகரிக்கும் 3 8 2000 இல் 11 ல் (இலாப ஸ்தானத்தில்)சனி பெயர்ச்சியடைவதால் சகல யோகங்களையும் நீங்கள் பெறுவீர்கள். தொட்டது துலங்கும்.எக்காரியத்தில் செயல் பட்டாலும் இறுதியில் வெற்றியளிக்கும். தொழில் சிறந்து விளங்கும், வருவாய் பெருகும்.

ஒக்டோபர் மத்தி முதல் ஏப்ரல் மத்திவரை, சனிவக்கிர காலத்தில் புதிய முயற்சிகள் அல்லது தொழில் ஆரம்பிக்கலாகாது சில காரியங்களில் தடைதாமதங்கள் ஏற்படும்.சனி தன் 3ஆம் பார்வையால் ஜென்மராசி கடகத்தை நோக்குவதால் புதிய செலவுகள் உண்டாகும்.வீடு மனை யோகம் கிட்டும்.நண்பர்கள், உறவினர் மூலம் பல நன்மை பெறுவர் சனி தன் 7 ஆம்பார்வையால் 5 ஆம் வீட்டை நோக்குவதால் உடல் நலம் பாதிக்கப்படும் சனி தனது 10 ஆம் பார்வையால் 8 ஆம் ஆயுள் ஸ்தான (கும்பத்தை) வீட்டை நோக்குவதால் துயரம்,கவலை நீங்கும், ஆயுள் பலமுண்டு.சௌபாக்கியயோகமுண்டு.

## சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் 1)

உங்களுக்கு 03 08. 2000 இல்சனிமாற்றம் 02.08.2000 இல் ராகு, கேது மாற்றமும் நன்மை. தீமை கலந்த பலாபலன்களைக் கொடுக்கும். 14 10. 2000 முதல் 11. 04. 2001 வரை 9 இல் சனியின் வக்கிர காலம்யோக பலன்களை உண்டாக்கும். இந்த 6மாத காலம் நீங்கள் எதிர் பார்த்த இலக்கைப் பெறுவீர்கள். தனம், பொருள், மனை, குடும்ப விருத்தியுண்டு. 02.06.2000 இல் குருவும், 03. 08. 2000 இல்சனியும்10ஆம்இடமாகிய இடபராசிக்கு மாற்றமடைகின்றன. 10 இல் வியாழன், சனி கர்ம சஞ்சாரம் வீடு அல்லது இடமாற்றம், உத்தியோக மாற்றம், திருமணத்தால் புதுமனைப் பிரவேசம் முதலியவற்றில் ஏதாவதொன்று இடம் பெறும்.

வியாழன், சனி கூடி கர்ம ஸ்தானத்திலும் இராகு இலாபஸ்தானத்திலும்,கேது பஞ்சமத்திலும் சஞ்சரிக்கும் போது வியாழனின் பார்வை தன, சட்டமஸ்தானங்களுக்கு விழுகின்றது கடந்த காலம் இருந்த புகழ், செல்வாக்கு இக்காலம் குறைவாகவே காணப்படும். தனகாரகன் வியாழன் தன் ஸ்தானத்தை (2ம்)நோக்குவதால்பேச்சாற்றல், எவரும் மதிக்கும் படியான நடை சபையினால் புகழப்படல் போசன சுகம். பொருள், பண வரவு முதலியன ஏற்படும். இல்லத்தில் சுபசோபனாதிகள் நடைபெறுவதுடன், விருந்து முதலிய கொண்டாட்டங்களும் இடம் பெறும் கணவன் மனைவி உறவு சீராகும். குடும்ப சுகம் உண்டாகி, சுப காரியங்கள் நடைபெறும்.

## கன்னி

(உத்தரம் 2, 3,ம் அத்தம், சித்திரை 1, 2)

உங்களுக்கு அஷ்டமத்துச் சனி 03. 08. 2000 இல் நீங்கும் போது, கண்டக, ராகு. கேது தோஷம் ஆரம்பிக்கின்றது. ராகு, கேது சஞ்சாரம் ஆகஸ்ட் முதல் பாதிப்பை ஏற்படுத்தாது. அஷ்டமத்து வியாழ தோஷமும், அஷ்டமத்துச் சனி தோஷமும் நீங்குகின்றன.9இல் குருசனி சஞ்சரிக்கும் காலத்தில் சுப யோக பலன்கள் ஒரு வருடம் வரை உண்டாகும். இராகு கர்மஸ்தானத்திலும், கேது, சுகஸ்தானத்திலும் சஞ்சாரம் செய்யும், வியாழன் ஜென்ம ராசியையும், 3ஆம் சகோதர ஸ்தானத்தையும், புத்தி புத்திர ஸ்கானத்தையும் நோக்கும். தேக சுகம் அதிகரிக்கும் நோய் பிணி கண்டம் நீங்கும் தேகம் புதுப் பொலிவுபெறும் வீரியம் கூடும் மனதில்சந்தோஷம்நிலவிஅமைதிதோன்றும்.

புத்திக் கூர்மையும், புத்திரர்களால் நன்மையும், உண்டாகும். 9ம் இடச்சஞ்சாரத்தால்பிதா மூலம் அவ்வப் போது உதவி ஒத்தாசைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். சிலருக்குபிதாவழிச் சொத்துக்கள் சேரவழியுண்டு சனீஸ்வரன் சம்பந்தம் பிதுர் ஸ்தானத்தில் இருப்பதால் வாதம், அஜீரணம் போன்ற நோய்களால் இடையிடையே பாதிப்பு ஏற்படலாம். சுப ஸ்தானத்தில் கேது இருப்பதால்மாதாவின்சுகப் பாதிப்பு கல்வி பாதிப்பு இடையிடையே உண்டாகலாம்.

## துலாம்

சித்திரை3 4ஆம் பாதங்கள் சுவாதி, விசாகம் 1, 2 3ம் பாதங்கள்)

03.08.2000 முதல் அஷ்டமத்துச் சனி ஆரம்பம். 14 10. 2000 முதல் 11. 04. 2001 வரை சனி 6 மாதங்களுக்கு மேடத்தில் வக்கிரமாகச் சஞ்சரிக்கும். ராகு கேதுக்கள்02 08.2000 முதல் யோகஸ்தானத்தில் சஞ்சாரம் செய்யும். இக்காலங்களில் குரு, சனிக்கு பிரீதிசெய்தல் வேண்டும்.

தேகநிலையில்பாதிப்பினை உண்டாக்கும். இக்காலத்தில் எடுத்த காரியம் உடனடி நற்பயன்களையும் உண்டாக்காது. பொருளாதாரத் தட்டுப் பாடுகளும் அதிக நெருக்கடிகளும் உண்டாகும். சொத்து வகையில் வீண்விரயங்களைஏற்படுத்தும். கடன் காரர்களின் தொந்தரவு அதிகரிக்கும். வழக்குகள் சாதகமான நற்பயனை உண்டாக்காது. உடல் நிலை பாதிப்புகள் மருத்துவச் செலவுகள் அதிகமாகும் தொழிலில்மந்தமான ஒரு நிலையும் வீண் செலவுகளில் நட்டங்களையும் தரும்.

கணவன் மனைவி உறவு நன்றாகக் காணப்படாது. உடன் பிறந்தவர்களால் ஒத்துழைப்பு இருக்காது, வாகனங்கள் பழுதடையும், இருக்கின்ற வீட்டிலும் குறைகள் இருந்து வரும் மனைவியின் ஆரோக்கியம் பாதிப்பு குடும்பத்திலும் நெருங்கியவர்கள் சாதகமாக இருக்கமாட்டார்கள். குறிப்பாக தாய்வழிக் கருமம் உண்டாகும். கொடுக்கல் வாங்கல்களில் மிகவும் சாதகமான பலன் உண்டாகாது. சோதனைகள் தொடர்ந்த படியே இருக்கும் உங்கள் குடும்பங்களில் நடைபெற்று வரும் வழக்குஇழுபறியாக இருக்கும். அடிக்கடி பயணங்கள் உண்டாகும். இக்காலத்தில் அலைச்சல் அதிகமாக இருக்குமே. ஒழிய ஆதாயம் ஏதும் இருக்காது: எனவே புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். மனதில்சோர்வு உண்டாகும்.

கடன் பயமும்காரியதமதத்தில் சௌரவ பாதிப்பும் உண்டாகும் சகோதர வழியில் தவிர்க்க முடியாத செலவீனங்களும் மனக்கசப்பும் ஏற்படும்.

அலைச்சல் அதிகமாக்கிவிடும், புதிய தொழில் தொடங்குவது உசிதமான பலன் இல்லை அரசு சம்பந்தமான காரியங்கள் சற்று மந்தமாகவும் தாமதமாகவும் நடை பெறும். நண்பர்களும் நல்ல வித உறவு இருக்காது குடும்ப வாழ்க்கையில் நிம்மதி இருக்காது. காரியத்தடைகள் இருந்து கொண்டேஇருக்கும், மறைமுக எதிரிகள் தொல்லைகள் அதிகமாகக் காணப்படும். உற்றார் உறவினர்களின் ஏளனத்திற்கு ஆளாகக் கூடிய நிலை உண்டாகும். தற்போதையதெசா புத்திகளின் பலன்கள்பலமாகவிருந்தால் மேற்குறிப்பிட்டதீய பலன்கள் தணியும்.

## விருட்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம். கேட்டை)

03.08.2000 முதல் சனி சப்த ஸ்தானத்திலும் ராகு, கேதுக்கள் அஸ்டம, தன ஸ்தானங்களில் சஞ்சாரம் செய்யும். ராகு. கேதுக்களுக்கு பிரீதி செய்தல் வேண்டும். குரு பகவான் 02 06.2000முதல்7ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்கிறார். 5ஆம் பார்வையாக11-ம்வீட்டையும் 7-ம் பார்வையாக ஜென்மராசியையும் 9-ம்பார்வையாக 3ம் வீரிய ஸ்தானத்தையும் பார்வைசெய்கிறார். உங்களுக்கு பிரமாதமான நற்பலன்கள் உண்டாகஇருக்கின்றது.

வெற்றிமேல் வெற்றியினை உண்டாக்கும் உங்கள் செல்வாக்கு அரசரிக்கும் தொழில் மேன்மையும் உண்டாகும் உங்கள் வலிமையாவும் கூடி எதிரிகள் பலம் குறையும் கணவன் மனைவி உறவில் மகிழ்ச்சியான நிலைகள் அதிகரிக்கும் மாணவ மாணவிகள் கல்வியில் மேன்மை அடைவர் குடும்பத்தில் சுபகாரியம் நடைபெறும் வியாபாரிகள் நல்ல இலாபத்தையும்பெற்று திகழ்வர் பொது வாழ்வில் இருப்பவர்களின் புகழ் பெருமைகள் கூடிடக் காண்பார்கள் பெண்கள் நினைத்த காரியம் நிறைவேறப் பெறுவர் பொருள் வரவுகள்யாவும் தாராளமாக இருக்கும்.

வாழ்வில் ஏற்றமும் முன்னேற்றமும் உண்டாகும் தொழில் ரீதியாகபுதிய திருப்பத்தையும் அனுகூலத்தையும் தரும் பூர்வீகச் சொத்துக்களின் சம்பந்தமான வழக்குகள் யாவும் சாதகமான பலனைத் தந்திடும் கூட்டுத் தொழில் செய்பவர் பெரும் இலாபத்தை அடைவர் பெண்களுக்கு குடும்பத்தில் பூரிப்பும் மனமகிழ்ச்சியும் உண்டாகும் அடிக்கடி வெளியூர் பிரயாணம் ஏற்படுத்தித் தரும்.

பொருளாதார ரீதியில் மிகவும் யோகமான பலன்கள் உண்டாகும் சிலர் புதிய வீடு கட்டி குடியும் செய்வார்கள் அல்லது வீடு வாங்கும் அமைப்பினையும் பெற்றுத் திகழ்வர் கணவன் மனைவி உறவில் அதிக நெருக்கம் கூடும் மங்கையருக்கு ஆடை ஆபரணத்தில் சேர்க்கை உண்டாகும் வேலை தேடுவோருக்கு அதற்கான வாய்ப்புக்கள் காணப்படும்.

## தனுசு

[மூலம்-பூராடம் உத்திராடம்-1ம் பதம்)

03.08 2000 முதல் 5 இல் நீசச்சனி நஞ்சுச்சனி தோஷம் நீங்குகிறது. கண்டக ராகு, கேது தோஷம் ஆரம்பமாகிறது. 14.10.2000 முதல் 11.04.2001 வரை சனி வக்கிர காலம் நன்மையில்லை, சனி ராகு, கேதுக்களுக்கு இக்காலங்களில்பிரீதிசெய்தல் நன்று குருபகவான் 02.06.2000 முதல் 6 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்கிறார்.

6 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்யவிருக்கும் குருபகவான் தனது 5 ஆம் பார்வையாக 10 ஆம் வீட்டையும் 7ஆம் பார்வையாக 12 ஆம் வீட்டையும் 9பார்வையாக 2ஆம் வீட்டையும் பார்வைசெய்கிறார். எனவே இக்குரு பெயர்ச்சி சோதனைகளைக்

★ சுஜாஸ் ★

கொடுத்தாலும் 6ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்யும் குரு பகவானால் சோதனைகள் குறைந்து சொகுசான நற்பயன்களையும் தரும். ஏற்றமும் உயரமும் உண்டாக்கிக் கொடுத்திடக் கூடிய உன்னதமான காலமாகும். தேக நிலை சுமாராகத்தான் இருக்கும். நிறையப் பொருள்வரவு இருந்தாலும் அவையாவும் செலவாகிய நிலையிலேயே காணப்படும். குடும்பவாழ்வில் நிம்மதியிருக்காது. புத்திரர்களால் கணவன் மனைவிக்குள் சண்டைகள் சச்சரவுகள் மனக்கசப்புக்களையும் ஏற்படுத்தும்எதிர்பாராததனவரவுகளைக் கொடுக்கும். உங்களுக்கு மறைமுக எதிரிகளின் தொல்லைகள் ஸ்திர சொத்துக்களின் இழப்பும் ஏற்படலாம்.

## மகரம்

[உத்திராடம்-2, 3, 4ஆம் பாதங்கள்-திருவோணம் அவிட்டம் 1ஆம்-2ஆம் பாதங்கள்)

உங்களுக்கு 03.08.2000 முதல் 20.05.2003 வரை 4 ஆம் இடக் கண்டகச் சனி நீக்கம்,இடையே14.10.2000 முதல் 11.04.2001 வரை சனியின் 6 மாத வக்கிரத்தால் கண்டகத் தோஷம் உண்டாகும்.

குரு, சனி வக்கிர காலங்களில் நன்மையில்லை. தற்போது 02.06.2000 முதல் குருபகவான் 5 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்கிறார். அது போல சனிபகவான் 03.08.2000 முதல் 5 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வதால் அர்த்தஷ்டம சனி விடுதலையாகின்றது.

இந்த குருபெயர்ச்சி உங்களுக்கு எல்லாவிதத்திலும் ஏற்றத்தினையும் உயர்வினையும் உண்டாக்குவார் 5 இல் சஞ்சரிக்கும் குருபகவான் 5ஆம் பார்வையாக 9ஆம் வீட்டையும், 7 ஆம் பார்வையாக 11 ஆம் வீட்டையும், 9ஆம் பார்வையாக 1ஆம் வீட்டையும் பார்வை செய்வதால் உங்களுக்கு இந்தக் குருபெயர்ச்சி எடுத்த காரி

[2ஆம் பக்கம் பார்க்க)

# மீன் வியாபாரத்தில் தில்லுமுல்லுகள்

# பொது மக்கள் தரப்பில் விசனம்

## எனினும் கொட்டடியில் வியாபாரம் மும்முரம்

(அரியாலை)
மீன்விலை அதிகரித்துக் காணப்படும் நிலையை காரணமாக வைத்து மீன் வியாபாரத்தில் பலர் தில்லுமுல்லுகளை புரிந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குளத்து மீன்களை ஆழ் கடல் மீன் எனக்கூறி விற்பனை செய்து வருவதாகவும் இதனால் பலர் ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய அனர்த்தத்தையடுத்து கொழும்புத்துறை, பாசையூர், குருநகர் கடற்றொழிலாளர் இடம் பெயர்ந்துள்ளதுடன் தமது கடற்றொழிலையும் மேற்கொள்ள முடியாததாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொட்டடிச் சந்தையில் தினமும் காலை, மாலை வேளைகளில் மீன் வியாபாரம் வெகு மும்முரமாக இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(க-106)

## கடற்றொழில் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டோர்

[சுண்டுக்குளி]
குருநகரிலுள்ள பிராந்தியக் கடற்றொழில் மற்றும், கடலக இயந்திர பொறியியல் கல்லூரியில் மூன்று மாதகால பயிற்சி நெறிக்கு 20 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச கடற்தொழில் பயிற்சிக் கல்லூரி அதிபர் எஸ். செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சி நெறியை நடத்துவதற்கென 3 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவை யு.என்.எச்.சி ஆர் நிறுவனம் யாழ். செயலசத்தின் அனுசரணையுடன் வழங்கியுள்ளதாகவும், கடற்தொழில் அமைச்சு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்க உறுதியளித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் கீழே தரப்படுகின்றது.

என் இலங்கேஸ்வரன், சாவற்காடு
பி. குமரன், சுழிபுரம்
கே. குணசேகரம், சாவற்காடு
எஸ். நியூட்டன், குருநகர்
பி. றொசான், குருநகர்
என். விக்னேஸ்வரன், சாவற்காடு
ஏ. பிறின்ஸ் அன்ரனி, குருநகர்
ரி.எம்; றெட்சன், பாஷையூர்
பி. குகதாசன், நவாலி
இ. திலக், குருநகர்
ரி. புதியராஜா, சாவற்காடு
ஆர். டீன்குமார், பாஷையூர்
ஏ.எஸ் நேரியஸ், பாஷையூர்
ரி. தாயானந்தன், சாவற்காடு
கே. சுதன், சாவற்காடு
கே. கொன்சன்ரைன், குருநகர்
என். ராசேந்திரன், சாவற்காடு
பி. சேவியர் சூனவனஸ், குருநகர்
எ. அமல்குஜ், குருநகர்
எஸ் லக்சுமகாந்தன், நவாலி

17 வருடகால இடைவெளியின் பின் யாழ். பிரதேசத்தில் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறி இம் மாதம் 02 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

[சு]

## நோயாளர் வவுனியாவுக்கு

(புதுக்குடியிருப்பு)
புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலையில் இருந்து ஒன்பது நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(வ)

## திரையரங்கு உரிமையாளர் கைது

வவுனியா தோணிக்கல் திரையரங்கு குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக திரை அரங்கு உரிமையாளர் இராசு நவரத்தினம் (வயது 33) என்பவர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதே வேளை இக் குண்டு வெடிப்பில் காயமடைந்தோரைப் பார்வையிடச் சென்ற ரெலோ உறுப்பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் ஒருவர் ரெலோ அமைப்பின் பொறுப்பாளர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

(வ)

## ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்க பணிமனையை திருத்த நிதியுதவி

(யாழ்ப்பாணம்)
யாழ்.காங்கேசன்துறைவீதியில் அமைந்திருக்கும் யாழ்ப்பாணம்ஆரியதிராவிடபாஷா விருத்திச் சங்கப் பணிமனையைத் திருத்துவதற்கும், பணிமனைக்குத் தேவையான அத்தியாவசிய உபகரணங்களை வழங்குவதற்கும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் நிதியுதவி செய்ய முன் வந்துள்ளனர்.

முதற்கட்ட நிதியாக ரூபா ஒரு இலட்சம் வழங்குவதாக யாழ். பாராளுமன்ற உறுப்பினர் வி.குலேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.

இச்சங்கத்தின் தொண்டுக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் எம்மாலான பணிகளைச் செய்வோம்எனவும், பண்டிதபட்டதாரிகளுக்கான சம்பளத்திட்டம் ஒன்றை மேற்கொள்வோம்எனவும் உறுதியளித்துள்ளார்.

மேலும் சங்கநிர்வாகக் குழுவுடன் நேரில் கலந்துரையாடலுக்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாகச் சங்கச் செயலாளரிடம்கூறியுள்ளனர்

(க)

## இலவசபாடநூல் வந்துசேரவில்லை

(தென்மராட்சி)
யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அரசாங்க பாடசாலைகளில் தரம் 7 மற்றும் தரம் 10 ல் கல்வி பயில்கின்ற மாணவர்களுக்கான இலவச பாடப் புத்தகங்கள் இதுவரையும் அனுப்பிவைக்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இவ்விடயம்தொடர்பாக யாழ்ப்பாணக்கல்வித்திணைக்களத்தினரால் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு பலதடவைகள் தெரியப்படுத்தியும் கூட உரிய புத்தகங்கள் வந்து சேரவில்லை என அறியப்படுகின்றது.

இவ்வருடம் இரண்டாம் தவணை வகுப்புகள் முடிந்து விட்ட நிலையில் மூன்றாம் தவணையிலாவது இலவச பாடநூல்கள் யாழ்ப்பாணம் வந்து சேருமா என மாணவர்களும் பெற்றோரும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

(செ-77)

## இடம்பெயர்ந்த முகாம்களுக்கு மாவை எம்.பி விஜயம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்று முன்தினம் யாழ். மாவட்டத்தில்உள்ள அனைத்து அகதி முகாமிற்கும் சென்று அகதிகளின் குறை நிறைகளைக் கேட்டறிந்ததாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

அகதி முகாம்களுக்கு மாவை சேனாதிராசா எம்.பி சென்றபோது அங்குள்ள மக்கள் நிவாரணத்துக்கு வழங்கிய தரமற்ற அரிசியைக் காட்டியதாகவும், அது தொடர்பாக ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் எம்.பி தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தென்மராட்சியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கொல்லப்பட்ட காணாமல் போனவர்களின் விபரங்களை சேகரித்து வருவதாகவும் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை நேற்று ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்த மாவை எம்.பி ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளாரைச் சந்தித்துஉரையாடியதாகவும் தெரிவருகிறது.

(வ)

## மன்னார் மீனவர் பாதிப்பு

(மன்னார்)
மன்னாரில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள இறுக்கமான கட்டுப்பாடுகளினால் அங்குள்ள மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரில் நீண்ட தூரம் கடலில் சென்று மீன்பிடிப்பதற்கு நேரக் கட்டுப்பாட்டை அமுல் செய்வதனால் மீனவர்களின் தொழிலில் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதுடன் அவர்களின் வாழ்க்கைத்தரத்தையும் பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது:

(வ)

## அஷ்ரப் பிரார்த்தனை

(கொழும்பு)
உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் சர்வஜன வாக்குரிமை வெற்றிபெற வேண்டும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் பிரார்த்தனை செய்யப்போவதாகத் தெரிவித்துள்ளார்;

[வ]

கல்வி அமைச்சின்

## அனுமதி கிடைத்ததும் 750 பேருக்கு மட்டக்களப்பில் ஆசிரிய நியமனம்

(மட்டக்களப்பு)
வடக்கு- கிழக்குமாகாணங்களில் 750 ஆசிரிய நியமனங்களுக்கு அனுமதிஅளிக்குமாறு வடக்குகிழக்கு மாகாண ஆளுநர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன கல்வி உயர் கல்வி அமைச்சைக் கோரியுள்ளார்.

இதேவேளைமட்டக்களப்பு மாவட்ட வேலை அற்ற பட்டதாரிகள் சங்கம் ஆரம்பிக்க தீர்மானித்துள்ள சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் குறித்துமட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்ஜோசப் பரராசசிங்கம் ஆளுனரின்கவனத்திற்குகொண்டுவந்ததை அடுத்து சகல பட்டதாரிகளுக்கும் உடன்வேலைவாய்ப்புவழங்குவதற்கு உத்தரவாதம் தர முடியாது எனவும் மத்திய கல்வி அமைச்சின் அனுமதி கிடைத்தவுடன் 300 பட்டதாரிகளுக்கும், 450 தொண்டர் ஆசிரியர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்படும் என்று கூறியுள்ளார்;

மேலும் அடுத்த வருடம் 1000 பட்டதாரிகள் உட்பட 2500 பேருக்குஇலங்கைவங்கியின் அனுசரணையுடன் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

[ந]

## புலோலியில் 23 குடிசைகள் அமைப்பு அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி

(புலோலி)
வன் செயல்களினால்பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து பருத்தித்துறை பிரதேச புலோலி வடகிழக்கு கிராமத்தில் தஞ்சமடைந்துள்ளவர்களுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயமும் சர்வதேச கெயர் நிறுவனமும் இணைந்து 23 தற்காலிக குடிசைகளை அமைத்துக் கொடுத்துள்ளன.

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தஞ்சமடைந்திருந்தகுடும்பங்களுக்கே இத் தற்காலிக குடிசைகள் வழங்கப்பட்டுள்ளன.

இக் குடிசைகள் கையளிக்கும் வைபவம் கிராம சேவை அலுவலர் ஆர். புலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஏ. சிவசுவாமி சர்வதேச கெயர் நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர் திரு. எஸ். கதிர்காமநாதன் உட்பட இன்னும் பலர் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

[க-52]

## கட்டடம் புனரமைப்பு

(புலோலி)
புலோலி கிழக்கு புற்றளை கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம் திருத்தி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

புற்றளை கிராம மக்களின் நிதி உதவியினாலும் ஒத்துழைப்பினாலும் மேற்படி புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(க-52)

கல்குடாவில்

## இரு படையினர் தப்பியோட்டம் அப்பகுதி கிராமங்களில் தேடுதல் தீவிரம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்ட கல்குடா பகுதி இராணுவ முகாமில் கடமையில் இருந்த வேளை இரு படையினர் தப்பியோடியிருப்பதாக படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்களைத் தேடிக்கண்டுபிடிக்கும் வகையில், அப்பகுதிக் கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடாத்திய போதும் எவரும் கைதாகவில்லை.

இவர்கள் இருவரும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு தப்பியோடி இருக்கலாம் என படைத்தரப்பினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

(உ-7)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம் கந்தரோடை ஆலடி வீரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் இன்று வியாழக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

திருவிழாக் காலங்களில் தின்மும் மாலை வ. குமாரசுவாமி அவர்களின் சமயச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

(செ)

சாவகச்சேரியிலிருந்து

## இடம்பெயர்ந்த வர்த்தகர்கள் யாழ். எம்.பியிடம் வேண்டுகோள்

(தென்மராட்சி)
சாவகச்சேரி நகரில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த சுமார் நாநூறு வணிகர்களால் கைவிடப்பட்டு வந்த வர்த்தகப் பொருட்களையும், மற்றும் முக்கிய ஆவணங்களையும் அங்கிருந்து மீட்டு வருவதற்கான அனுமதியையும், அங்கீகாரத்தையும் பெற்றுத்தருமாறு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் சங்கம், யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பி. யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் சங்கத்தின் உபதலைவர் நீ. இராசநாயகத்தின் தலைமையில் வணிகர் சங்க உறுப்பினர்கள் டக்ளஸ் தேவானந்தா எம்.பியை சந்தித்தனர் எனத் தெரியவருகின்றது.

வணிகர் சங்கத்தின் கோரிக்கைகள் பற்றி தாம் ஆவன செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார் என அறியப்படுகின்றது.

(க-77)

## தலைவர் தெரிவு

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுஅரசாங்கசேவை ஓய்வூதியம் பெறுவோர் சங்கத் தலைவராக இளைப்பாறிய அதிபர் திரு. பீ. சங்கரப்பிள்ளை தெரிவானார்.

இப் பொதுக் கூட்டம் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் தற்காலிகமாக அலுவலகத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு வி. பி. வேலாயுதபிள்ளையின் தலைமையில் நடைபெற்றது.

(க-43-52)

### இன்று ஒரு தகவல்

## பொறுமையுடையோர் வாழ்வில் நலமடைவார்

ஒரு பெரிய ஞானி ''அவருக்கு கோபமே வருவதில்லை அந்த நிலையெல்லாம் கடந்தவர் அவர்'' என்று பலரும் பேசிக் கொண்டனர்.

ஒருவன் அவரைச் சோதிக்க விரும்பினான். அது எப்படி ஒருவருக்கு கோபம் வராது இருக்க முடியும் என்று அவன் எண்ணினான். எப்படியாவது இந்த ஆளுக்கு கோபத்தை உண்டாக்கி பார்த்துவிட வேண்டும் என்று ஒரு ஆசை வந்தது அவனிற்கு அந்த ஞானியிடம் போனான் அவன். வாய்க்குவந்தபடி கண்டபடி திட்டினான் அவன் அவருக்குக் கோபமே வரவில்லை சாந்தமாகவே இருந்தார்.

அவர் முகத்திலே எந்த வித்தியாசமும் தெரியவில்லை. இவனுக்கு ஒரே ஆச்சரியம். எப்படி இவராலே கோபமே கொள்ள முடியாமல் இருக்க முடியுது என்று நினைத்தான் அந்த மனிதன். சரி, சரி நாம் ஏன் இதைப்பற்றி அலட்டிக் கொள்ள வேண்டும். அவரிடமே இதைப்பற்றி விசாரித்தால் உண்மை தெரியாமலா போய்விடும். சரி நேராகவே அதையும் கேட்போம் என்று முடிவு பண்ணினான் அவன். பெரியவரே! நான் இவ்வளவு தூரம் உங்களை கண்டபடி திட்டியிருக்கிறேன் உங்களுக்கு கொஞ்சம்கூட கோபமே வரவில்லையே. உங்களால்எப்படி இந்த அளவுக்கு பொறுமையாய் இருக்க முடியுது என்று கேட்டான். அந்த ஞானி முகத்திலேபுன்னகை அவர் அவனைப் பார்த்து பின்வருமாறு கேட்டார். 'உன்னிடம் காசு ஏதாவது இருக்கா' என்றார். அவனுக்கு மீண்டும் ஆச்சரியம். இந்த ஞானிக்கு கோபமே வராவிட்டாலும் காசு மீது இன்னமும் ஆசை போகவில்லை. என்று நினைத்தான். அவன்

''சே இவ்வளவு தானா இவர்'' என்று நினைத்துக் கொண்டே ஒரு சிறிது பணத்தை எடுத்து அவரிடம் நீட்டினான்அவன் அவர்அதை வாங்கினார் திருப்பி அவர் அதை அவனிடமே கொடுத் என்னைத் திட்டினாய். அதனால் நீயே அதனைத் திரும்பவும் பெற்றுக் கவனமாய் வைத்துக்கொள். உன்னிடமே திருப்பித் தந்துவிட்டேன். இவ்விதம் கூறினார் அந்த ஞானி.

இதுபோலவே இன்னொரு சம்பவம் நபிகள்நாயகம் நாள் தவறாமல் ஒரு பள்ளிவாசலிற்கு சென்றுவந்தார். போற வழியிலே ஒருஅம்மா வீட்டு மாடியிலிருந்து குப்பையை அவர் தலைமேலே கொட்டிக் கொண்டு இருந்தார்கள். இதுக்காக நபிகள்நாயகம் கொஞ்சம்கூட முகம்சுளிக்கவில்லை. யார் அப்படிச் செய்தார்கள்என்றுவிசாரிக்கக்கூட இல்லை. பொறுமையாகத் திரும்பிவந்து வேறு ஆடைகள் அணிந்து தொழுகைக்குப்போவார். இப்படி தினமும் நடந்தது.

ஒருநாள் பள்ளிவாசலுக்கு அவர்போனார். போகிற சமயத்திலும் குப்பை விழவில்லை. திரும்பி வருகிற சமயத்திலும் இவர் தலைமேலேகுப்பை விழவில்லை. அன்றுதான் நபிகள்நாயகம் அந்த வீட்டைத் திரும்பிப் பார்த்தார்.

எதிர் வீட்டுக்காரர் இவரைக்கண்டதும் ''நீங்க போங்கையா... அந்தஅம்மா ஏதோ தெரியாத்தனத்தாலே இப்படிப்பண்ணிட்டார்'' என்றார்.

''அதுக்கில்லை... ஒவ்வொரு நாளும் இது தவறாது நடைபெறுமே இன்றுஏன் அப்படி நடக்கவில்லைஎன்று தெரிந்து கொள்ள பார்க்கிறேன்'' என்றார் நபிகள்நாயகம். அந்த அம்மாவிற்கு உடல்நலம் சரியில்லைஎன்றனர். உடனே நபிகள்மனம் கலங்கிப்போய் அந்த அம்மாவிற்காக பிரார்த்தனை செய்தார்.

அந்தஅம்மா குணமடைவதற்கான சிகிச்சையையும் பண்ணினார் அவவின்உடம்பு மட்டுமல்ல-மனதும் குணமாகியது. கருணை என்று சொன்னால்அதுக்கு இதுதான் உதாரணம். சான்றோர்களும் பெரியவர்களும் ஒருபோதும்

# தெல்லிப்பழை வைத்தியசாலையை நோக்கி பெருமளவினர் படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையை நோக்கி பெருமளவு நோயாளிகள் படையெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் தற்போது பரவியுள்ள நோயின் தாக்கத்தாலேயே பெருமளவிலானோர் இவ்வாறு வைத்தியசாலையை நோக்கிச்செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலைக்கு கடந்த சில காலங்களாக நோயாளர் வருகை பெருமளவு அதிகரித்துள்ளது. விடுதிகளில் தங்க வைக்கப்பட்டு சிகிச்சை பெற வேண்டியவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இவ்வைத்திய சாலை தற்போது தெல்லிப்பழை கூட்டுறவு வைத்திய சாலையின் புனரமைக்கப்பட்ட ஒரிருகட்டட பகுதியிலே இயங்கிவருவதால் பெரும் இடநெருக்கடிகளை சந்தித்து வருகின்றதுடன் மேலதிக கட்டில் வசதிகளற்றும் காணப்படுகின்றது.

மேலும் இவ்வைத்தியசாலைப் பகுதி மழைநாட்களில் மழைநீர் தேங்குவதால் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-12)

## வேலணையில் வறியவர்க்கு உதவி

(மண்டைதீவு)

வேலணைப்பிரதேச சபைப் பிரிவில் வசிக்கும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களின் விபரங்களை ஈ. பி. டி. பி. அமைப்பினர் கிராமங்கள் தோறும் திரட்டி வருகின்றனர்.

இவ் விபரம் திரட்டும் பணியில் சனசமூக நிலையங்கள் கிராம உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மிகவும் வறிய குடும்பங்களை இனம் கண்டு நிதி உதவிகளை வழங்குவதற்காகவே இவ்விபரங்கள் திரட்டப்படுவதாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(உ-2)

## ஆசிரியருக்கான புதிய கைநூல்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் திறமையை அதிகரிக்கும் நோக்கில் ஆசிரியர்களுக்கான கைநூல் ஒன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென கல்வி உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எந்தவொரு பாடத்திலும் தமது திறமையை வெளிக்காட்டும் மாணவர்களின் கல்வி அறிவை ஊக்குவிக்கவும் மற்றும் திறமை குறைந்த மாணவர்களுக்கு தேவையான பயிற்சிகளை உரிய முறையில் வழங்கவும் இக் கைநூல் பயன்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## ஊழியர் விபரம்

## பாலபண்டித பரீட்சையில் சித்திபெற்றோர்

(யாழ்ப்பாணம்)

ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கம் நடத்திய பாலபண்டித பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகியுள்ளன.

சித்தியடைந்தோர் விபரம் வருமாறு;

இரண்டாம் பிரிவிற் சித்தியடைந்தோர் செல்வி மீனலோசினி அருணாசலம் சாவகச்சேரி, செல்வி யோகரூபி யோகேஸ்வரன் யாழ்ப்பாணம்.

மூன்றாம் பிரிவிற் சித்தியடைந்தோர் செல்வி திலீபா வல்லிபுரநாதன், யாழ்ப்பாணம், திரு. சிவயோகநாதன் முருந்தன் பருத்தித்துறை, திருமதி சத்தியபவானி செபமாலைதாசன் யாழ்ப்பாணம், செல்வி காயத்திரி நெல்லிநாதன் கோப்பாய், செல்வி வசந்தகௌரி பாலகிருஷ்ணன் சண்டிலிப்பாய், செல்வி சுப்பிரமணியம் தவராணி சுழிபுரம், செல்வி விஜயகௌரி சிவப்பிரகாசம் பண்டத்தரிப்பு, செல்வி ரமணி தளையசிங்கம் புத்தூர், திருவ. ஆ தங்கமயில் கரவெட்டி;

நூனசித்தியடைந்தோர் திரு. நவரத்தினம் குகபரன் சித்தங்கேணி, செல்வி இராமநாதன் சசிகலா வட்டுக்கோட்டை, திருமதி விஜயராகிணி சிவகுமாரன் பண்டத்தரிப்பு, செல்வி மாலினி குணரத்தினம் யாழ்ப்பாணம், செல்வி சுஜிந்தா செகராசசேகரம் சங்கானை.

சித்திபடைந்தோருக்குரிய சான்றிதழ்கள் சங்கப் பணிமனைத் திறப்பு விழாவைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள ஒன்றுகூடலில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா. தணிகாசலம்பிள்ளையால் வழங்கப்படும்.

சித்திபெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்குவது குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (க)

### யாழ். போதனா வைத்தியசாலையில்

## கொலரா நோயாளர்க்கு தனியான விடுதியில்லை; பொதுமக்கள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில், கொலரா நோயாளர் தங்கிச் சிகிச்சைபெறுவதற்கு தனியான விடுதியின்மையால் மற்றைய நோயாளர்களுடனே அந்நோயாளர்களும் தங்கிச்சிகிச்சை பெற்றுவருவதாக அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருசில கொலரா நோயாளர்கள்மட்டுமே தற்போது

கொலரா நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது.

இந் நிலைப்பாடானது ஏனைய நோயாளர்களிடையே அதிருப்தியினையும், அருவருப்பினையும் ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், தொற்று நோயான கொலரா, தமக்கும் ஏற்பட்டுவிடுமோ எனவும் அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்;

நீட்டினான் அவன் அவர் அதை வாங்கினார் திருப்பி அவர் அதை அவனிடமே கொடுத்தார்.

''ஏன் இது போதாதா...... இன்னமும் வேணுமா'' என்று கேட்டான் அவன் அதுக்கு அந்த ஞானி சொன்னார். ''இதோ பாரப்பா... இந்த நாணயம் உனக்கு முக்கியமாக தெரியலாம் இதனாலே எனக்கு எதுவித பிரயோசனமுமில்லை அதனாலே அதை நான் ஏற்கவில்லை! கொடுத்தவரிடமேதிருப்பிக் கொடுத்துவிட்டேன். அதே மாதிரி இவ்வளவு நேரம் நீ திட்டின வார்த்தைகள் எதுவுமே எனக்குப் பொருந்தாது... ரொம்பச் சிரமப் பட்டுஅந்த வார்த்தைகளையெல்லாம் நீசேகரித்து

... உதாரணம். சான்றோர்களும் பெரியவர்களும் ஒருபோதும் சமநிலை இழப்பதில்லை. பொறுமை என்னும் அணிகலன் பூண்டவர்களாகவே இருப்பர்.

அவர்களை உலக பந்தங்களோமற்றவைகளோஎதுவும் செய்வதில்லை. அவர்கள் உலகினைகடந்து உலகாயுத தன்மையற்றவர்களாக வாழ்வார்கள். நிலம் நாம் கொத்த கொத்த எத்தனை பொறுமையாகவுள்ளதோ அது போலவே பெரியோர்களும் பொறுமையெனும் அணிகலன்பூண்டு புகழோடு வாழ்பவர். பொறுமையே புகழ் தேடும்.

தென்கச்சி சுவாமிநாதன்

## மட்டு. மாவட்டத்தில்

# கல்வி அபிவிருத்திப் பணிகளிற்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 90 பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திப் பணிகளிற்கு என மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் 35 லட்சத்து 25 ஆயிரத்து 500 ரூபாவைத் தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இதன் மூலம் மாவட்டத்தில் உள்ள 12 பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள 90 பாடசாலைகளில் தளபாடம், பாண்ட்சருவி, தொலைத்தொடர்பு மின்சாரம், விளையாட்டுப் பொருட்கள் எனப் பல்வேறு அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (சு-60)

## ஊழியர் விபரம் திரட்டல்

(மண்டைதீவு)

பிரதேச சபைகளில் கடந்த வருடம் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த வருடம் கார்த்திகை மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் 180 நாட்களைப் பூர்த்தி செய்த ஊழியர்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ-2)

## உதவிப்பொருள் வழங்கல்

(கோப்பாய்)

அண்மைக்கால அனர்த்தங்களினால் தென்மராட்சி, பளை, அரியாலை போன்ற இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து J/259 கல்வியங்காடு கிராம சேவையாளர் பிரிவில்தங்கியுள்ளவர்களுக்கு யு. என். எச். சீ, ஆர் நிறுவனத்தினால் பொருட்கள்வழங்கப்பட்டு வருகின்றது.

இவர்களுக்குரிய இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவுப் பதிவுகளும் மேற்கொள்ளப்படுவதாக அப்பகுதி கிராம உத்தியோகத்தர்எஸ் முத்துக்குமாரசாமி தெரிவித்துள்ளார். (உ-2)

...ளிக்கப்பட்டுள்ளது.

ஒருசில கொலரா நோயாளர்கள்மட்டுமே தற்போது வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெற்று வருகின்ற போதிலும், அவர்கள் சிகிச்சைபெற தனியான விடுதி ஏதும் ஒழுங்கு செய்யப்படவில்லை.

இதனால் ஏனைய நோய்களுக்குச் சிகிச்சைபெற்று வருவோர்க்கு மத்தியிலேயே ...கும் ஏற்பட்டுவிடுமோ எனவும் அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

எனவே மேற்படி நிலையினைக் கருத்திற்கொண்டு, மக்களுடைய சுகாதார நலனைப் பேணும்வகையில் சம்பந்தப்பட்டோர் ஏற்ற நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (உ)

## மட்டு.மாவட்டத்தில்

# கடந்த 6 மாதத்தில் மட்டும் 21 புலிகளின் சடலம் பொறுப்பேற்பு

## ச.செ. சங்கம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 6 மாத காலத்தில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தால் 21 விடுதலைப்புலிகளின் சடலங்களும் 4 படையினரின் சடலங்களும் பொறுப்பேற்று உரியவர்களிடம் கையளிக்கப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் காணாமல் போன 111 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டு.மாவட்டத்தில் கடந்த 6 மாத காலப் பகுதியில் இராணுவக்கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் 27724 பேரிற்கு மருத்துவ உதவிகளை வழங்க உள்ளூர் ஐ.சி.ஆர்.சி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர் மருத்துவ சேவையின் மூலம் மண்டபத்தடி, கரடியனாறு, உச்சையிளி, கொல்லுகண, இலிப்பிட்டிச் சேனை ஆகிய கிராம மக்கள் நன்மை பெற்றுள்ளதாக அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-60)

# தீவிரவாதிகளின் தாக்குதலில் 26 பேர் துடிதுடித்துப் பலி

### அமர்நாத்தில் சம்பவம்

(ஸ்ரீநகர்)

ஸ்ரீநகரிலிருந்து நூறுகிலோமீற்றர் தொலைவிலுள்ள அமர்நாத் யாத்திரிகர்கள் முகாமை நோக்கி தீவிரவாதிகள்மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் பயணிகள் மற்றும், தீவிர வாதிகள் உட்பட குறைந்தது 26 பேர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னரும் பயணிகள்முகாமொன்றையும் தீவிரவாதிகள் தாக்கியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

சம்பந்தப்பட்ட பகுதி நோக்கி கூடுதலான இராணுவத்தினர் அனுப்பப்பட்டிருப்பதாகப் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இச் சம்பவம் குறித்து பிரதமர் வாஜ்பாய் பலத்த கண்டனம்தெரிவித்துள்ளார். (து)

## நேபாள இந்திய வளர்ச்சிக்கு எனது பயணம் உதவிடும்

### பிரதமர் குயாராலா

(புதுடில்லி)

நேபாளப் பிரதமர் குயாராலா இந்தியாவில் 6நாள்பயணமாக நேற்றுமுன்தினம் புதுடில்லி வந்து சேர்ந்தார்.

அவருக்கு குடியரசுத் தலைவர் மாளிகை முன்னரங்கில் பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயும் அவரது அமைச்சரவை சகாக்களும் அதிகாரிகளும் வரவேற்பில் கலந்து கொண்டார்கள்.

அங்கு செய்தியாளரிடம் குயராலாஇந்தப்பயணம் இரு நாடுகளுக்கிடையேயும் பரஸ்பரம்நல்லுறவுகளை வளர்க்குமென்றும் இரண்டு நல்லநட்புறவு கொண்ட நாடுகள்ஒன்று சேர்ந்து முன்னேற முடியும் என்பதை உலகத்துக்கு எடுத்துக்காட்ட விரும்புவதாகவும் குயாராலா செய்தியாளர்களிடம்கூறியுள்ளார். (து)

## இந்திய இராணுவ தளபதியாக பத்மநாதன் பதவியேற்பு

(புதுடில்லி)

இந்திய இராணுவத்தின் புதிய தளபதியாக லெப். ஜெனரல் எஸ்.பத்மநாதன் விரைவில் பதவி ஏற்கவுள்ளார்.

இவர் ஜெனரல் ஜெய பிரகாஷ் மலிச்கிடமிருந்து ஒக்ரோபர் முதல் திகதி பொறுப்பை ஏற்றுக் கொள்வாரெனத்தெரிவித்தார்.

இவரது புதிய பதவியேற்பு இந்தியஇராணுவ கட்டமைப்பில் பாரியமாற்றங்களை ஏற்படுத்துவதுடன் இலங்கை விடயத்தில் இந்தியாவின் அணுகு முறையில் பாரிய திருப்பத்தையும் ஏற்படுத்துமென அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர். (க-து)

### பிலிப்பைன்ஸில்

## இந்தோ. தூதுவர்மீது தாக்குதல் மயிரிழையில் உயிர்பிழைத்தார்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டுக்கான இந்தோனேசியத் தூதுவர் மீது இனம் தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில், தூதுவர் மயிரிழையில் உயிர் தப்பியிருப்பதாக பிலிப்பைன்ஸ் செய்திகள் தெரிவித்துள்ளன.

பிலிப்பைன்ஸின்தென் பகுதி ஒன்றில் காரில் பிரயாணம் செய்து கொண்டிருந்த வேளை, இந்தோனேசியத் தூதுவர் நியூடிலே கடேல் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதில் அவர் தலையிலும் கையிலும் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டும், கார்ச் சாரதி உட்பட 20 பேர் காயமடைந்துமுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதேசமயம், பிலிப்பைன்ஸ் தென்பகுதியில் தனிநாடு கோரிப் போரிட்டுவரும் இஸ்லாமிய ஆயுததாரிகளே இத்தாக்குதலை நடாத்தியிருப்பதாக இந்தோனேசிய அதிபர் அப்துர்ரஷ்மான் வாஹிட் தெரிவித்திருப்பதை பிலிப்பைன்ஸ் அரசு நிராகரித்துள்ளது. (உ)

## ஒரிஸா மிருகக்காட்சிச் சாலையில் மற்றோர் வெள்ளைப்புலி இறப்பு

(புதுடில்லி)

ஒரிஸா மாநில நந்தன் கானன் மிருககாட்சிச் சாலையில் அண்மையில் மற்றோர் வெள்ளைப்புலி இறந்துள்ளது.

மேற்படி மிருககாட்சிச் சாலையில் ஐந்தடி நீளமான முதலை ஒன்று இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டு 24 மணி நேரத்திற்குள் இவ் வெள்ளைப் புலி இறந்திருப்பது ஒரிஸா மாநில சட்டப் பேரவை வரை பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

ஈக்களால் பரவும் ரத்த ஒட்டுண்ணிக்கிருமியே இப்புலியினது இறப்புக்கும் காரணமாய் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதேவேளை இவ் மிருகக் காட்சிச் சாலையில் சொற்ப காலத்தில் 13 வெள்ளைப்புலிகள் இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

## இந்தோனேசிய நிலை குறித்து அரசியல் தலைவர்கள் பேச்சு

### உலக தரிசனம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் உயர் மட்ட அரசியல் தலைவர்கள் நாட்டின் அரசியல் பொருளாதார நிலைபற்றிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளார்கள்.

மக்கள் ஆலோசனை மன்றத்தின் கூட்டத்தொடர் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாக இருப்பதால் நாட்டின் அரசியல் சமூக பாதுகாப்புப் பிரச்சினை ஆகியவற்றில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை பற்றி அரசியல் தலைவர்கள் ஆராய இருக்கிறார்கள்.

இந்தோனேசியாவில் பல மாகாணங்களில் பிரிவினைவாத மோதல்கள் தலைதூக்கியிருக்கின்றன. இந்த மோதல்களை அடக்குவதற்கு அரசாங்கத்தால் இயலாதிருக்கிறது.

இதேவேளை இந்தோனேசிய ஜனாதிபதி வாஹிட் நாட்டின் நிலைமை அவ்வளவு மோசமில்லை என்று தெரிவித்தார். (து)

## தீவிரவாத தலைவர்களுடன் பேச்சு நடத்த இந்திய அரசு முயற்சி

(ஸ்ரீநகர்)

பிரபல தீவிர வாத இயக்கமான கிஸ்புல் முஜாகுதீன் அமைப்பின் சில முக்கிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்திய மத்திய அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அரசதரப்பு செய்திகள் தெரிவித்துள்ளன.

இது விடயம் தொடர்பாக மத்திய அரச அதிகாரிகள் தம்முடன் தொடர்பு கொண்டு வருகின்றனர்என்பதனை அவ் அமைப்பின் தலைவர் ஒருவர் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

பேச்சுக்கள் தொடங்குவதற்கு முன்சம்பந்தப்பட்ட குழுக்களிடையே பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவது தனது முக்கிய கடமைப்பாடு என்று தூரதர்சன் நிருபருக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்தார்.

ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில்அமைதிஏற்படுத்துவதற்கு இடையூறு விளைவிக்க விரும்பாத அமைப்புகள் ஒவ்வொன்றும் யுத்த நிறுத்தத்தை ஆதரித்து இந்த வாய்ப்பைப்பயன்படுத்த முன் வர வேண்டும் என்றும் குறேசி கூறினார். (து)

## சந்தனக்கடத்தல் வீரப்பனை சந்திக்க நக்கீரன்-கோபால் காட்டிற்குவிரைவு

(புதுடில்லி)

கன்னட நடிகர் ராஜ்குமாரை விடுவிக்கும் முயற்சியாக சந்தனக்கடத்தல் வீரப்பனைச் சந்திப்பதற்காக நக்கீரன் வார இதழ் ஆசிரியர் கோபால் காட்டுக்குச் சென்றுள்ளார்.

சந்தனக்கடத்தல் வீரப்பனின் அனுமதி கிடைத்ததையடுத்து மேலும் மூவருடன் ஈரோடு மாவட்டம்சத்தியமங்கலம் வழியாக காட்டை அடைந்து,வீரப்பனின் ஆட்கள் வந்து அழைத்துச் செல்லும் வகையில் அங்கு காத்திருப்பதாக பிந்திக்கிடைத்த தகவல்கள் தெரிவித்துள்ளன. (து-உ)

## காடு சென்று வீரப்பனைச் சந்திக்க சுப்பர்ஸ்ரார் ரஜனிகாந் விருப்பம்

(புதுடில்லி)

சந்தனக்கடத்தல் வீரப்பனால் கடத்தப்பட்ட கன்னட நடிகர் ராஜ்குமாரை விடுவிக்கும் வகையில் காடு சென்று வீரப்பனைச் சந்திக்கத் தயார் என தமிழ்த்திரையுலகின் சுப்பர்ஸ்ரார் ரஜனிகாந் அறிவித்துள்ளார்.

நக்கீரன் வார இதழ் ஆசிரியர் கோபால், வீரப்பனைச் சந்தித்து ராஜ்குமார் விடுதலை தொடர்பாக பேசியபின், தேவைப்பட்டால் தானும் சென்று பேசத்தயார் என ரஜனி இசைவு வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, கன்னடக்காரரும், தமிழ்த்திரையுலகின் முன்னணி நட்சத்திரமும் உலகத் தமிழர்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றவருமான நடிகர் ரஜனிகாந் வீரப்பனைச் சந்திக்க இசைவு தெரிவித்திருப்பது பலவித ஊகங்களைத் தோற்றுவித்துள்ளன.

நடிகர் ரஜனிகாந் தானும் ஓர் கன்னடக்காரர் என்ற வகையில், தனது இனத்தவரான நடிகர் ராஜ்குமார் மீது உள்ள இனப்பற்று காரணமாகவே இதற்கு உடன் பட்டுள்ளதாக ஒரு சாரார் கூறி வருகின்றனர்.

இதனை மறுத்து, மேற்படி கடத்தல் காரணமாக கேரளாவில் வாழும் தமிழர்கள் எதிர்கொண்டு வரும் துன்பங்களைத் துடைக்கும் நோக்கில் தன்னை வளர்த்த தமிழ் நாட்டுக்குச் செய்யும் கைமாறாகவே இதனை ரஜனி ஏற்றுள்ளார் என அவரது தீவிர ஆதரவாளர்கள் வாதிட்டு வருகின்றனர் (உ)

## இம்மாதம் பலஸ்தீன தலைவர் யசீர்அரபாத் ரஷ்யாவுக்கு விஜயம்

(மொஸ்கோ)

பலஸ்தீன தலைர் யசீர் அரபாத் இம்மாதம் 10 ஆம் திகதி ரஷ்யாவேுக்கு விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

1997 ஆம் ஆண்டில் இருந்து மத்தியகிழக்கு பேச்சுவார்த்தையில் அமெரிக்கா ஈடுபட்டு வரும்வேளைகளில் ரஷ்யா அதற்கு அனுசரணையாளராக செயற்பட்டு வந்தமை தெரிந்ததே.

தற்போது மத்தியகிழக்குப் பேச்சுக்களில் ஏற்பட்டிருக்கும் தேக்க நிலைகளையடுத்து அரபாத் ரஷ்ய விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளார்.

இதேசமயம், ஐரோப்பிய நாடுகள் சிலவற்றுக்கும் யசீர் அரபாத் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேறகொள்ளவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## தென்கிழக்காசிய நாடுகளுக்கு உதவ மேற்கு நாடுகள்தயார்

(கொங்கொங்)

தென்கிழக்காசிய அமைப்பு நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிசெய்வதாக, அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் உறுதியளித்திருக்கின்றன.

தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் சூரின்பிச்சுவான், அமெரிக்க வெளியுறவுஅமைச்சர் திருமதி மடலின் அல்பிறைட்டை மேற்கோள்காட்டி இத்தகவலை பாங்கொக்கில் வெளியிட்டார்.

தாய்லாந்தில் நடந்த அமைச்சர்கள் மகாநாட்டிற்கும் பிந்திய மகாநாட்டில் திருமதி அல்பிறைட் பேசுகையில், 10 உறுப்பு நாடுகளின் முயற்சி மற்றும் வளர்ச்சி எதையும் பாதிக்கக்கூடிய வகையில் வாஷிங்டன் செய்யாதுஎன்று உறுதி கூறினார். (து)

## கடத்தப்பட்டவர் விடுதலை

(கோலாலம்பூர்)

கடந்த ஏப்ரல் மாதம், பிலிப்பைன்ஸில் இருந்து கடத்திச் செல்லப்பட்டு மலேசியத்தீவொன்றில் பணயம் வைக்கப்பட்டிருக்கும் சுற்றுலாப் பயணிகளில் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மலேசியாவைச் சேர்ந்த படப்பிடிப்பாளரும் பத்திரிகையாளருமான ஒருவரே விடுதலை செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம்,மே மாதம் கடத்தப்பட்ட 21 பேரில் இதுவரை ஜேர்மனியர் ஒருவர் உட்பட 6 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (உ)

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் மற்றைய எல்லாம் பிற

- குறள்

வலம்புரி

## ஆதிக்கத் தேர்கள்

இந்த நாட்டிலே ஆதிக்க வெறியர்கள் ஒரு வழிச் சிந்தனையோடு இருக்கும்வரை அரசியல் மறுமலர்ச்சி காணப்படுவது துர்லபமே. மதவாதிகள் தமது கடந்த கால வரலாறுகளை மீட்டுப் பார்க்க வேண்டும். இன்று மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் மீது சீறுவோர் வரலாறு தந்த பாடங்களை ஏன் உணர மறுக்கிறார்களோ தெரியாது.

அக்கு வேறு ஆணிவேறாக ஆட்டம் காணும் ஆதிக்க ரதங்கள் இனிமேலும் இந்த மண்ணில் சுகமாக ஓட முடியாது. காரணம் குனியக்குனியக் குட்டு வாங்கியது போதும் என்ற உணர்வலைகள் உசுப்பி எழுப்பிய இளைய சமுதாயத்தைக் காணக் கூடியதாக இருப்பதாலேயாம்.

வீறும் வேகமும் கொண்ட சமுதாயத்தை இனி மேல் ஏமாற்ற முடியாது. சந்திரனைக் கேட்ட இராமனுக்கு கண்ணாடியில் சந்திரனைக் காட்டியது அக்காலம். எங்கள் மண்ணில் சுதந்திரமாக கால் பதிக்க வேண்டும். எங்கள் தாயகம் இரு அலகு கொண்ட ஒரு கூறு என்பது காலம் காலமாக இருந்த தொன்று. அந்த ஒன்றுக்காய் நாம் கொடுத்த விலைகள் ஏராளம்.

இன்றைக்கு சப்பைக் கட்டுத் தீர்வு வேண்டியதில்லை. நாங்கள் பட்ட துன்பதுயரங்களோடு இறுதியும் நிறைவுமாக மலரும் தீர்வினையே தமிழ் உள்ளங்கள் அவாவி நிற்கின்றன.

ஏதேதோ பிறழ்ந்த நினைவுகள். இதயம் கனக்கிறது. ஊறுபடுத்திய ஊதாரிகளை முறுக்கேறிக்கிடக்கும் நரம்புகள் முட்டி மோதும். ஏற்றம் இறக்கம் பற்றி பேசும் நெஞ்சங்களின் பிறழ்ந்த நினைவுகள் காற்றில் பறக்

# அறிவுபூர்வமான திறன்கொண்ட பிரஜைகளை உருவாக்குவதே ஆசிரியர்களின் பணியாகும்

நீ. கமலநாதன்

[பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி]

ஒரு ஆசிரியரது கடமைக் கூறுகளில் முக்கியமானது தனது நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான அறிவுபூர்வமான திறன் கொண்ட பிரஜைகளை உருவாக்குதல் என்பதாகும். மேலும் ஆசிரியர்கள் தாம் சார்ந்த சமூகத்தின் ஆக்கபூர்வமான அபிவிருத்திப் பணிகளில் முதுகெலும்பானவராவர்.

இவற்றிற்குச் செயல் வடிவம் கொடுப்பதற்கு ஆசிரியர் ஒருவரிடம் உயர் மட்ட, உயர் தொழில் தகைமை எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்காக கல்வி கற்ற இளைஞர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்கு ஆசிரியத் தொழில் சார் அறிவினை சேவைக்கு முன் பயிற்சி மூலம் வழங்கி, ஆசிரியத் தொழிலுக்கு வேண்டிய வாண்மை விருத்தியினை வளர்த்து, கற்பித்தல் தொழிலில் ஈடுபட அனுமதித்தல் சிறப்புடையது என அறியப்பட்டது.

இத் தேவையினை நிறைவு செய்வதற்கு வேண்டி இலங்கையில் கல்வியியற் கல்லூரிகள் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் 1985-ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 1-ம் திகதி ஆரம்பிக்கப் பட்டன.

ஆரம்பத்தில் ஐந்து கல்வியியற் கல்லூரிகள் தொடங்கப் பட்டன. அவற்றில் நான்கு சிங்கள மொழி மூலக் கல்வியியற் கல்லூரிகளாகவும், ஒன்று ஆங்கில மொழி மூலக் கல்வியியற் கல்லூரியாகவும் அமைந்திருந்தன.

### கல்வியியற் கல்லூரிகள்

கல்வியியற் கல்லூரிகள் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியுடனான ஆசிரியர்களை உருவாக்குவனவாகவும், பாடசாலைகளில் உள்ள பௌதீக—மனித வளங்களில் இருந்து உச்சப் பயன் பெறக் கூடிய வகையிலும், ஆசிரியர் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைப் பெறக் கூடியதாகவும் திட்டமிடப் பட்டுள்ளன.

அத்துடன் கல்வியியற் கல்லூரிகள் தமது செயற்பாட்டின் மூலம் ''சமூக விருத்தி'' என்ற அம்சத்தில் முக்கிய கவ

டியதன் அவசியத்தைப் பிரதான நோக்காகக் கொண்டும் செயற்படுகின்றன.

கல்வியியற் கல்லூரிகளுக்கு பீடாதிபதி (President) தலைவராகத் தொழிற்படுகின்றார். தேசியக் கல்வியியற் கல்லூரிகள் யாவும் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டினைக் கொண்டன. கல்விக் கல்லூரிகளுக்குப் பொறுப்பான்மை வாய்ந்த அதிகாரியாக பிரதம ஆணையாளர் கடமை புரிகின்றார். இவர் ஈசுறுபாய, பத்திர முல்லையில் அமைந்துள்ள கல்வியமைச்சில் இருந்து பணி புரிகின்றார்.

கல்விக் கல்லூரிகளினது தேவைகளை பிரதம ஆணையாளர், கல்லூரிப் பீடாதிபதியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு நிறைவேற்றி வருகின்றார். விரிவுரையாளர் நியமனம், நிதி, மாணவர் அனுமதி போன்றவையும் பீடாதிபதியுடன் தொடர்பு கொண்டு பிரதம ஆணையாளரே நிறைவேற்றுகின்றார். பீடாதிபதிக்கு உதவியாக கல்வி சார் கடமைகளைக் கவனிக்க ஒரு உப பீடாதிபதியும், நிர்வாகம், நிதி கடமைகளைக் கவனிக்க ஒரு உப பீடாதிபதியும் பணி புரிவர். அவர்களின் கீழ் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு விரிவுரை இணைப்பாளர்கள் கடமை புரிவர்.

### பயிற்சிக் காலம்

கல்வியியற் கல்லூரிகள் 2 வருடங்கள் உள்ளகப் பயிற்சியை நிறுவன ரீதியாகவும் (Instiution allsed Training) ஒரு வருடம் கட்டுறுப்பயிலினை (InternShip) வெளிவாரியாக பாடசாலைகளிலும் வழங்கி வருகின்றன. பாடசாலையின் கட்டுறு பயில்வு கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஒருவரின் வழிகாட்டலும், பாடசாலை அதிபர், சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரின் உதவியுடனும் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு பாடசாலைக்கு கட்டுறுப் பயில்வுக்காகக் கல்வியியற் கல்லூரி ஆசிரியப் பயி

ஒழுக்கம் ஆகியவை அப்பாடசாலை அதிபரின் முழுப் பொறுப்பில் அமைந்திருக்கும்.

அதிபரால் அப்பாடசாலையின் வகுப்பு ஒன்று கட்டுறுப் பயில்வு பயிலுநருக்கு கற்பித்தல் ஒழுங்குகளில் உதவியும், ஆலோசனையும் வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### கட்டுறுப் பயில்வு

கட்டுறுப் பயில்வு ஆசிரிய மாணவர்களை பாடசாலை ஒன்றில் இணைத்தல் அல்லது வகுப்புக்களை ஒதுக்கித்தரல் என்பது அப்பாடசாலையில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காகவோ அல்லது குறிப்பிட்ட அவ்வகுப்பு ஆசிரியர்களுக்கு லீவு வழங்குவதற்காகவோ அல்ல என்பதை மிக முக்கியமாகக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

கட்டுறுப் பயில்வு மாணவர் ஒருவர் கற்பித்தலில் ஈடுபடும் போது அவரது வகுப்புகளுக்குப் பொறுப்பான ஆசிரியரும் வகுப்பில் தங்கி அம்மாணவருக்கு உதவியாக இருந்து கற்பித்தலை அவதானித்து பின்னர் அவர்களுக்கு ஆலோசனை வழங்கி ஆரோக்கியமான முறையில் நெறிப்படுத்தல் பெரிதும் வேண்டப்படுகின்றது. ஆரம்பக்கல்வி வகுப்புக்களில் இச் செல்நெறி பெரிதும் விரும்பப்படுவதுடன் எல்லா மாவட்டங்களிலும் இவ்வாறான முறை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

இங்கு இன்னுமொரு விடயத்தினையும் ஒரு பக்கத்தில் கொள்ளுதல் வேண்டும். ஒரு ஆசிரியரின் பயிற்சிக் காலத்தில் அவர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுபொருத்த முடையதொன்றல்ல என்பது கல்வியியலாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்தக் காலம் அல்லது பருவம் ஆலோசனை வழங்குவதற்கும் வழிகாட்டுவதற்குமுரிய காலம் என்பதைக் கல்வி உலகம் நன்கறியும். இந்த முறையைப் பின்பற்ற வேண்டியது அவசியமானதும் ஆரோக்கியமானதுமாகும்.

இன்று இலங்கையில் ஆசிரிய முன் சேவைப் பயிற்சியினை வழங்குவதற்காக 14 கல்வியியற் கல்லூரிகள் செயற்படுகின்றன. 1997ம் ஆண்டுக்கு

செயற்பட்ட இந்நிறுவனங்கள் 1997ம் ஆண்டு கல்விச் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து தேசிய கல்வியியற் கல்லூரிகள் என்று அழைக்கப்படுகின்றன; சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் போதனைகள் நடைபெறுகின்றன;

கண்டி மகாவலி தேசிய கல்வியியற்கல்லூரி பொல்கொல்லவில் 1985 இல் ஆரம்பிக்கப்பட்டது.

களுத்துறையில் பஸ்துன்றட்ட தேசிய கல்வியியற் கல்லூரி 1985 இல் ஆரம்பிக்கப்பட்டது.

கம்பகா சியனே தேசியக்கல்வியியற்கல்லூரிபத்தலகொடவில் 1985 இல் ஆரம்பிக்கப் பட்டது.

கம்பகா சாரிபுத்த தேசியக் கல்வியியற் கல்லூரி நிட்டம்புவவில் 1986 இல் ஆரம்பிக்கப் பட்டது.

மாத்தறை நில்வளதேசியக் கல்வியியல் கல்லூரி அக்குறசவில் 1987இல் ஆரம்பிக்கப்பட்டது.

நுவரேலியா ஸ்ரீபாத தேசியக்கல்வியியற்கல்லூரிபத்தனவில் 1992 இல் ஆரம்பிக்கப் பட்டது.

அம்பாறை அட்டாளைச் சேனை தேசியக்கல்வியியற் கல்லூரி அட்டாளைச்சேனையில் 1992 இல் ஆரம்பிக்கப் பட்டது.

வவுனியா தேசியக் கல்வியியற்கல்லூரி பூந்தோட்டத்தில் 1993 இல் ஆரம்பிக்கப் பட்டது.

மட்டக்களப்பு தேசியக்கல்வியியற்கல்லூரி 1995 இல் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாண தேசியக்கல்வியியற் கல்லூரி கோப்பாயில் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

குருணாகல் வயம்ப தேசிய கல்வியியற் கல்லூரி பின்கிரியவில் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது;

இரத்தினபுரி றாவான் புர தேசியக்கல்வியியற் கல்லூரி 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது;

காலி றுகுண தேசியக்கல்வியற் கல்லூரி அக்மீமனவில் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

பொலநறுவை புளத்திசிபுர தேசியக்கல்வியியற் கல்லூரி கதுருவெலவில் 2000

புகள் முட்டி மோதும். ஏற்றம் இறக்கம் பற்றி பேசும் நெஞ்சங்களின் பிறழ்ந்த நினைவுகள் காற்றில் பறக்கப்போவது திண்ணம். உலகை விழித்துப் பார்க்க வேண்டும்.

வாருங்கள் வடம் பிடிப்போம் என்ற நிலையில் நாட்டின் நலன் கருதி விசுவாசத்துடன் உழைக்க முன்னிற்க வேண்டும் சிறு பிள்ளைத்தனமான குற்றச்சாட்டுக்கள் நாட்டின் சமாதானம் மலர நந்தி போல் அமைந்து விடும். சமயவாதிகளின் இணைற்றுத்தவளை போன்ற சிந்தனைகளும், சண்டித்தனங்களும் எம்மை எந்த வழியிலும்முன்னேற்ற மாட்டாது.

ஆணவப் போக்கு அழிவு வர முன்பு வந்து நிற்கும். சாண் போனால் என்ன முழம் போனால் என்ன என்ற வன்மைப்பாட்டோடு வாழ்வு மலர வேண்டி உழைக்கும் தியாகிகள் இம்மியும் பின்னோக்கி நகரப் போவதில்லை. இந்த நிலையில் உண்மை துலங்க செல்நெறி பற்றுவதே அறிவு.

அன்புடன் ஆசிரியர்

அத்துடன் கல்வியியற் கல்லூரிகள் தமது செயற்பாட்டின் மூலம் ''சமூக விருத்தி'' என்ற அம்சத்தில் முக்கிய கவனம் கொண்டுள்ளன. பாடசாலையும் சமூகமும் இணைந்து செயற்பட வேண்

ளப்பட்டுள்ளன.

ஒரு பாடசாலைக்கு கட்டுறுப் பயில்வுக்காகக் கல்வியியற் கல்லூரி ஆசிரியப் பயிலுநர் ஒருவர் நியமிக்கப்படும் போது அவருக்கான கற்பித்தல் ஏற்பாடுகள், வரவு,

# சாயி அருளமுதம்



யதா யதாஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பாரத. அப்யுத்தானம் அதர்மஸ்யத தாத மானம் ஸ்ருஜாம்யஹம்!!

## கானல்நீர்வாழ்க்கை

மனித சமுதாயத்துக்கு தர்மத்தைக் கற்பிக்கவும் அவர்களை தெய்வத் தன்மைக்கு உயர்த்தவும், இறைவன் மனித அவதாரம் எடுக்கிறார். தர்மமே இவ்வாறு மனித வடிவம் எடுத்துள்ளது. வெளியுலகப் பொருட்களை நேசித்து மக்கள் காலத்தை வீணாக்குகிறார்கள். இது பற்றுதலே தவிர, அன்பல்ல, இறைவனை நேசிப்பதே உண்மையான அன்பு, அதற்கு தான் பக்தி என்று பெயர். பக்தியின் வெளிப்பாடே தர்மம் இந்த தர்மத்தை அறிந்தவன் தூய அன்பை வளர்க்கின்றான்.

இறைவனை நேசிப்பவன் வெகு எளிதாக தர்மத்தைப் பின் பற்ற முடியும். அன்பும் தர்மமும் இரட்டையர்கள். இன்று மனிதன் இந்த இரண்டு குணநலன்களையும் இழந்து விட்டான். இவை இரண்டும் இல்லாத வாழ்க்கைகானல் நீர் போன்றது.

பாபா

வழங்குவதற்காக 14 கல்வியியற் கல்லூரிகள் செயற்படுகின்றன. 1997ம் ஆண்டுக்கு முன்னர் கல்வியியற் கல்லூரிகள் என்ற பெயருடன்

பொலநறுவை புளத்திசிபுர தேசியக்கல்வியியற் கல்லூரி கதுறுவலவில் 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

## வருடாந்த மஹோற்சவம்

அருள்மிகு அனலைதீவு ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த் தோற்சவமும் நடைபெறவுள்ளது. (செ-75)

## தொடர்ந்தும் விளக்கமறியலில்

புலோலியைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமி ஒருவர் மீது பாலியல் வல்லுறவை மேற்கொண்டதாகசந்தேகிக்கப்படும் இராணுவச் சிப்பாய்களான எஸ். பெரேரா எஸ். கன்னங்கரா ஆகியோர் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காணப்படாமையினால் தொடர்ந்தும் விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளனர்

(உ-53)

## நினைவு சொற்பொழிவு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கல்வியியல் மற்றும் நிர்வாகவியல் கட்டமைப்பின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரான அமரர் பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரனின் இரண்டாவது ஞாபகார்த்த சொற்பொழிவு நேற்று முன்தினம் கைலாசபதி கலையரங்கில்இடம்பெற்றது.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் 'நஞ்சூட்டுதலை உறுதிப்படுத்தும் விஞ்ஞானச் சான்றுகள்' எனும் தலைப்பிலான ஆங்கில உரையை நிகழ்த்தினார்.

இச்சொற்பொழிவினை கல்விமான்கள் சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் பெருமளவில் பங்குகொண்டு செவிமடுத்தனர்.

(க-77)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்



## நல்லூர் மகோற்சவம் சிறப்புற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

### வைத்தியகலாநிதி தெய்வேந்திரன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள நல்லூர் முருகன் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் விடுத்த செய்திக்குறிப்பு வருமாறு;

நாளை மறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இம்மாதம் 31ம் திகதியுடன் முடிவடையவுள்ள நல்லைக்கந்தன் வருடாந்த உற்சவம் அமைதியாகவும், ஒழுங்காகவும் பக்திபூர்வமாகவும் நடந்தேறும் விதத்தில் சகல ஏற்பாடுகளும் யாழ். மாநகரசபையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன;

முருகனைத் தரிசிக்கும் நோக்குடன் ஆலயத்திற்கு வருகைதரும் அடியார்கள் எவ்வித இடையூறுமின்றி தரிசித்துச் செல்வதற்கு வசதியாகத் தொண்டர் நிறுவனங்களின் பூரண ஒத்துழைப்போடு ஆலயத்திற்குமிக அண்மையில் ஆலய வீதிகளில் வாகனங்களின் ஓட்டத்தினைக் சட்டுப்படுத்தும் பொருட்டு வீதித்தடைகள் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்படவுள்ளது.

கடந்த காலங்களின் பிரதான சந்திகளில் அமைக்கப்பட்டது. போன்று வீதித்தடைகள் இம்முறையும் அமையவுள்ளன, வீதித்தடைகளுக்கு அப்பால் எவ்வித வாகனங்களும்செல்லுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

ஆலயத்திற்கு வரும் அடியாாகள் அனைவரும் ஆலய வீதிகளில் வீணாகப்பொழுது போக்குவதைத் தவிர்த்து நேர காலத்தோடு தமது வீடுகளுக்குச் செல்லுவதன் மூலம் அநாவசியமான பிரச்சினைகளைத் தவிர்க்க முடியுமென எதிர்பார்க்கின்றோம்.

அனைத்து அடியார்களும், பொது மக்களும், பாதுகாப்புப் பிரிவினரும், பொலிசாரும் மாநகரசபைப் பணியாளர்களும் எம்முடன் ஒத்துழைத்து முருகனின் உற்சவம பகதிபூர்வமாக நடந்தேற உதவுமாறு அச்செய்திக்குறிப்பில் கேட்கப்பட்டுள்ளது.

### ஐ. தே. க...

பான தமது சட்சியின் இறுதி முடிவை தெரிவிப்பதாகமேற்படி கலந்துரையாடலிற்கு ஏற்பாடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட சட்சி மேலிடம் விடுத்த வேண்டுகோளிற்கு அமையவே இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது;

எனினும்இச்சந்திப்பில்வாக்களிப்பது தொடர்பான இறுதி முடிவ எதுவும் எடுக்கப்பட்டதாகதெரியவில்லை.

### பாராளுமன்றில், .

சரவணமுதது, சுனிதா அபயக்கோன் ஆகியோரும் எதிர் மனு தாக்கல் செய்துள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் ஆஜரான கே. என். சொக்ஸி சிங்கள உறுமயக் கட்சி சார்பில் ஆஜரான குணசேசா ஆகியோர் உயர் நீதிமன்றத்திற்கு இதனை விசாரிக்க அதிகாரம் இல்லை என வாதிட்டனர்;

பிரதம நீதியரசர் சரத்என் சில்வா, பிரியந்த பெரேரா, லக்ஸ்மன் வீரசேகரா ஆகியோர் முன்னிலையில் இம் மனுக்சள் டரிசீலனை செய்யப்பட்டது. [வ]

## முதலாம் ஆண்டு
## நீங்கா நினைவஞ்சலி



## நடமாடும் வங்கிச் சேவை மூலம் 2000 ரூபா வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலங்களில் இடம் பெற்ற அனர்த்தங்களினால் தென்மராட்சி, பளை, வடமராட்சி யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் வடக்கு மேற்கு தெற்குப் பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ள சுமார் 32 ஆயிரம் குடும்பங்களுக்கான முதற்சட்ட 2000 ரூபா கொடுப்பனவு மக்கள் வங்கி மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கிகள் மூலமாக வழங்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இடம் பெயர்ந்த மக்கள் அதிகமாகத் தங்கியிருக்கின்ற சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் நடமாடும் வங்கிச் சேவை மூலம் அவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாவை வழங்குவதற்கான ஏற்பாடுகளை வடபிரதேச மக்கள் வங்கி உயர் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

சங்கானை மானிப்பாய் பிரதேசங்களில் தங்கி உள்ள இடம்பெயர்ந்த மக்களின் நன்மை கருதி கன்னாதிட்டி மக்கள் வங்கியும் சண்டிலிப்பாயில் தங்கியுள்ள மக்களுக்கு ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியும், உடுவிலில் தங்கியுள்ள மக்களுக்கு சுன்னாகம் மக்கள் வங்கியும் நடமாடும் வங்கிச் சேவையை நடத்தவுள்ளன.

வடமராட்சியில் தங்கியுள்ள மக்களுக்கு பருத்தித்துறை, நெல்லியடி மக்கள் வங்கிக் கிளைகள் இச்சேவைகளை நடத்துமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை, அரியாலைப் பகுதி மக்களுக்கு மக்கள் வங்கி பிரதானக் கிளை நேற்று வரை 253 குடும்பத்திற்கு சேமிப்புக்களை ஆரம்பித்து வைத்துள்ளதாகவும் சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் முடிவடைந்தமையால் மிகுதிப் பேருக்கு யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் கணக்குகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் மக்கள் வங்கி அதிகாரி ஒருவர் ''வலம்புரி''க்குத் தெரிவித்தார்; (வ)

### ரிக்கெற்...

படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை லங்கா முடித்த கப்பலிற்கான பயணச் சீட்டிற்கு 600 ரூபா அறவிடப்படுவதாகவும் ஆனால் சிற்றி ஓவ் றிங்கோ கப்பலிற்கு 1000 ரூபா அறவிடப்படுவதால் சிக்கல் நிலை எழுந்துள்ளதாகவும் எனினும் இது குறித்து சாதகமான முடிவு ஒன்று எட்டப்படும் என்றும் உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (க-வ-03)

கஜன்
திரை
ஊர்காவற்றுறை
சரத்குமார் -ரோஜா
மணிவண்ணன்
நடித்த!
சின்னக்குளை

### கப்பலில்...

றுத்தருவதுடன் மக்கள் வங்கி வழங்கும் கடனுக்கு அறவிடும் 19%வட்டியை 6% வட்டியாக குறைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டது.

வணிகர் கழகத்தின் கோரிக்கைகளை கேட்டறிந்த மாவை சேனாதிராசா எ.ம்.பி இவை தொடர்பாக வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம விடமும் ஜனாதிபதியுடனும் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக வணிகர் சழகத்திடம் தெரிவித்துள்ளார். (வ)

### பிணையில்...

மேல் முறையீட்டு நீதி அரசர்கள் எச். எஸ், யாப்பா பி. எஸ். குலதில ஆகியோர் சந்தேகநபர்களை பதினையாயிரம் ரூபாரொக்கப் பிணையிலும் சரீரப் பிணையிலும் செல்வதக்கு அனுமதியளித்னர். [வ]

### கூட்டணி.. :

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் பீடம் இன்னும் இரண்டொரு தினங்களில் அரசியல் சீர்திருத்த மசோதா இம்மாதம் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்கொள்வதற்கு முன்பதாக கூட்டணியின் அரசியல்பீடம் கூடி ஆராய உள்ளதாகவும் தெரியவருகிறது. (வ)

### யாழில்...

யின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் நேற்று நேரில் சந்தித்து

### சஞ்சீவனை......

சஞ்சீவனின் மரணத்தை நேரில் கண்டவர்கள் எவரும் இது வரை சாட்சியமளிக்க முன்வரவில்லையெனத் தெரிவித்தார், சஞ்சீவனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எதுவித தொடர்பும் இல்லையெனவும் குழுவினர் எடுத்துக்கூறினர்

### அரசியல்...

யோர் இதனை தீவிரமாக பரிசீலனை செய்து வருகின்றனர்'

உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்தம் பாராளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப் படும்போது ஜே. வி.பியினர் பாராளுமன்றக் கட்டடத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தவும், பௌத்த ரேரினவாதிகள் மறியல்போர் செய்ய உத்தேசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜே. வி. பி. யினரின் ஊர்வலம் மற்றும் பிக்குமாரின் ஆர்ப்பாட்டத்தினால் பாராளுமன்ற வளாகத்தில் அசம்பாவிதங்கள் நடைபெறலாம் என்ற முன்னேற்பாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது, கூடுதல் இராணுவமும், பொலிசாரும் கலகம் அடக்கும் படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு நடைபெறுமென சபாநாயகரினால் முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட விசேட அமர்வில் அரசியல் சட்ட சீர்திருத்த மசோதா ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது1

இதேவேளை இம்மசோதா மீதான விவாதம்இந்தமாதம் 8-ம் திகதியிலிருந்து தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும்,

பத்தாவது பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைய இன்னமும் 21நாட்



**அமரர் முருகர் அழகரத்தினம்**

(இளைப்பாறிய பட வரைஞர்,
நில அளவைத் திணைக்களம்)

தோற்றம்:- 30 - 09 - 1937
மறைவு;- 15 - 08 - 1999

திதி:- 03 - 08 - 2000

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

அன்பின் உருவமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் சிறந்த வழிகாட்டியாய்
இருந்து எமை வழிநடத்திய அன்புத் தெய்வமே
நீங்கள் அணைந்து ஓராண்டு சென்றாலும்
எம் துயர் ஆறாது.

அன்பகலா நினைவுடன்

82, மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.
(612)

மனைவி, பிள்ளைகள்,
தந்தை, உடன்பிறப்புகள்,
மைத்துனர்கள்.

---

நடித்த
**சின்னத்துரை**

காட்சி நேரம்
பி.ப 3.30 மணி

(கி/652)

---

**ஸ்ரீசெல்வா**

[யாழ்ப்பாணம்]

கார்த்திக்-கௌசல்யா
நடித்த

**குபேரன்**

10-30, 2-00 (ப.நே)

எம். ஜி. ஆரின்

**எங்கிருந்தோ வந்தாள்**

வெள்ளி மட்டும்
கி 688

---

யாழ்.மாவட்ட பாராளு மன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் நேற்று நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக டக்ளஸ் தேவானந்தா பொதுநிர்வாக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சரோடு தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை நடத்துவதற்கு ஒழுங்கு செய்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

(ந-2)

பெறும்.

பத்தாவது பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைய இன்னமும் 21 நாட்கள் இருக்கும் நிலையில் ஜனாதிபதி சந்திரிகா இத் தீர்வுத்திட்டத்தை சகல சமூகத்தினரின் பார்வைக்கு சமர்ப்பித்து அவர்களின் அனுசரணையுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருந்ததாக அரசியல் ஆய்வாளர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

[வ

---

யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின்
சம்மேளனம்

## நிர்வாகசபைக் கூட்ட அறிவித்தல்

யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனத்தின் நிர்வாகசபைக் கூட்டம் 06 - 08 - 2000 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10-30 மணிக்கு (புதிய நேரம்) இல. 27, நவீனசந்தை மேல்மாடியில் உள்ள யாழ். வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறும். இக் கூட்டத்தில் சகல வர்த்தக சங்கங்களின் தலைவர் / செயலாளர்களும் தவறாது பங்குபற்றும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இக் கூட்டத்தில் 2000 ஆண்டுக்கான பொதுக் கூட்டம் பற்றி ஆராயப்படும்.

யாழ்- மாவட்ட
வர்த்தக சங்கங்களின் சம்மேளனம்

இல. 27, நவீன சந்தை (மேல் மாடி)
யாழ்ப்பாணம்.

(சி- 687)

இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ நிறுவனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.